விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை (04.11.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 321







# அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஐ.தே.க. தலைமையில் கூட்டணி

## தமிழ்க் கூட்டமைப்பை இணைக்கவும் முயற்சி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் இணைந்து பாரிய கூட்டணியொன்றை உருவாக்கப்போவதாக அறிவித்துள்ளன. இக் கூட்டணிக்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமை தாங்கவுள்ளது. இக்கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி நோக்கிய படை நடவடிக்கையில் 80 வீதமான பகுதி மீட்கப்பட்டது

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னி நோக்கிய படை நடவடிக்கையில் 80 வீதமான பகுதி படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் வந்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு நோக்கிய படை நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் வசம் இருந்த 80 வீதமான நிலங்கள் படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் வந்துள்ளன.

வடக்கு நோக்கிய படை நடவடிக்கையில் விடுதலைப் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக அரசின் நிவாரணப் பொருள்கள் ஐ.நா., ஐ.சி.ஆர்.சி. மூலம் விநியோகம்

### தமிழக அரசுக்கு மத்திய அரசு விளக்கம்

(சென்னை)

தமிழக அரசின் நிவாரணப் பொருள்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதருக்கு அனுப்பப்பட்டு அவை பாதிக்கப்பட்ட தமிழருக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா.சபை ஆகியவற்றின் மூலம் விநியோகம் செய்யப்படும் என்று முதல்வர் கருணாநிதிக்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு,

இலங்கைப் போரில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு இந்தியாவில் இருந்து அனுப்பப்படும் உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருள்களை எப்படி வழங்குவது என்பதை இலங்கைஅரசுதான் முடிபு செய்யும் என செய்தி வெளியாகியுள்ளது.

இதைத் தொடர்ந்து முதல்வர் கருணாநிதி உடனே பிரதமர் மன்மோகன் சிங், மற்றும் வெளியுற (12ஆம் பக்கம் பார்க்க)

## இறுதித் தீர்வுத் திட்டம் அடுத்த வாரம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நிறுவப்பட்ட சர்வ கட்சிப் பேரவையின் இறுதித் தீர்வுத் திட்டம் எதிர்வரும் வாரமளவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக பேரவையின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இறுதித் தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதற்காக சர்வகட்சிப் பேரவையின் நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் (12ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் மோதல் 10 படையினர் பலி

(கிளிநொச்சி)

மாங்குளம் நோக்கிய படையினரின் முன் நகர்வு தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 10 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

வன்னிவிளாங்குளத்திலிருந்து மாங்குளம் நோக்கி படையினர் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் முன் நகர்வினை மேற்கொண்டனர்.

இம்முன் நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலித் தளங்கள் மீது விமானக் குண்டுவீச்சு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள வெற்றிலைக்கேணியிலும், கட்டைக்காடு பகுதியிலும் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் (12ஆம் பக்கம் பார்க்க)


### உள்ளே...

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த (சா/த) பரீட்சை - 2008

*தமிழ்மொழியும் இலக்கியமும்* II

(வினாத்தாள்)


# கிளிநொச்சி மீது படையினர் அகோர எறிகணைத் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர் மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவும் நேற்றுப் பகலும் படையினர் அகோரமான முறையில் ஆட்டிலறி எறிகணை வீச்சுத் தாக்குதலை நடாத்தியதாக கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித் தன.

நேற்று மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 16 வீடுகள் அழிந்துள்ளன. கிளிநொச்சி நகரிலுள்ள தொண்டமான்நகர் -புதுமுறிப்பு -செல்வாநகர் உட்பட்ட பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது படையினர் நேற்று முன்தினமும் நேற்றும் செறிவான ஆட்டிலறித் தாக்குதலை நடத்தினர்.

இதனால் மக்கள் பெரிதும் அல்லோலகல்லோலப்பட்டனர்.மக்களின் 16 வீடுகள் அழிந்துள்ளன. 18 வணிக நிலையங்கள், வீடுகள் சேதமாகியுள்ளன. படையினரின் எறிகணை வீச்சுத் தாக்குதலால் கிளிநொச்சி நகரம் அதிர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதலின் போது ஏற்பட்ட சேதங்கள் பற்றிய மேலதிக தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (ச-5)

## அவலங்களை முடிவுக்கு கொண்டுவர அரசியல் தீர்வொன்று அவசியம்

### துணைவேந்தர், பீடாதிபதிகள் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தொடரும் அவலங்களை முடிபுக்குக் கொண்டுவருவதற்கு நிலையான அரசியல் தீர்வு ஒன்றே வழியென யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரும் பீடாதிபதிகளும் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக துணைவேந்தரும் 6 பீடங்களைச் சேர்ந்த பீடாதிபதிகளும் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வருடம் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக செயற்பட்ட மாணவனின் அகாலமரணமும் அதனைத் தொடர்ந்து மாணவர்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## அவசர தேவைக்காக செல்வோருக்கு 48 மணிநேரத்துள் பாதுகாப்பு அனுமதி

(யாழ்ப்பாணம்)

அவசர தேவைக்காக விமானம்,கப்பல் மூலம் பயணிப்பதற்கு 48 மணி நேரத்தினுள் பயணப் பாதுகாப்பு அனுமதியினை பெற்றுக் கொள்ள முடியும் என பலாலி படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.


இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

அவசர தேவைக்காக விமானம், கப்பல் மூலம் பயணிப்பதற்கு 48 மணி நேரத்துக்குள் பயணப் பாதுகாப்பு அனுமதியை பெற்றுத்தர பாதுகாப்பு படையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அதன்படி கீழ்வரும் ஆவணங்கள் கிராம சேவை அதிகாரியினால் உறுதி செய்யப்பட்டு பிரதேச செயலரினால் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அருகில் இருக்கும் இராணுவ முகாமில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

கிராமசேவை அதிகாரியிடமிருந்தோ அல்லது பிரதேச (12ஆம் பக்கம் பார்க்க)

# டைட்டானிக் மூழ்கியது ஏன்? புதிய தகவல்கள் வெளியானது



(லண்டன்)

பக்கத்திலேயே வந்து கொண்டிருந்த கப்பலின் ரேடியோ இயக்குநருடன் டைட்டானிக் கப்பலின் ரேடியோ இயக்குநர் சண்டையிடாமல் இருந்திருந்தால் டைட்டானிக் கப்பல் மூழ்காமல் காப்பாற்றப்பட்டிருக்கும் என்று இப்போது வெளியிட்ட ஒரு டாக்குமென்டரியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

96 ஆண்டுகளுக்கு முன் சுமார் 1500 பேரை பலி கொண்ட டைட்டானிக் கப்பல், கடலில் மூழ்கிப்போனதற்கு அந்த கப்பலின் ரேடியோ இயக்குநர்தான் காரணம் என்று அது தெரிவிக்கிறது.

கடந்த 1912ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 14ஆம் திகதி பனிப்பாறை ஒன்றில் மோதி கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் 25 வயது ஜாக் பிலிப் என்பவர் ரேடியோ இயக்குநராக பணியாற்றி வந்தார்.

அப்போது டைட்டானிக் கப்பலுக்கு சுமார் 20 மைல்களுக்கு அப்பால் எஸ்எஸ் கலிபோர்னியன் என்ற இன்னொரு கப்பலும் வந்து கொண்டிருந்தது.

அந்த கப்பலுக்கு, எதிரே இருக்கும் பனிப்பாறை தெரிந்திருக்கிறது. அதனை டைட்டானிக் கப்பலுக்கு தகவல் சொல்ல முயன்றபோது டைட்டானிக் ரேடியே இயக்குநர் அவரது கப்பலின் பயணம் செய்துகொண்டிருக்கும் பயணிகளுக்கு வழங்க வேண்டிய ஏராளமான வாழ்த்து தகவல்களை கையில் வைத்துக் கொண்டு அதைத்தான் அனுப்பிக் கொண்டிருந்ததாக சொல்லப்படுகிறது.

அந்த நேரத்தில் எஸ்எஸ் கலிபோர்னியன் கப்பலில் இருந்த ரேடியோ இயக்குநர் சிரில் ஈவன்ஸீடன் டைட்டானிக் ரேடியோ இயக்குநர் பிலிப் வாக்குவாதத்திலும் ஈடுபட்டிருக்கிறார்.

இதனால் எரிச்சலடைந்த சிரில் ஈவன்ஸ், ரேடியோவை நிறுத்தி விட்டார். அதாவது டைட்டானிக் பனிப்பாறையில் மோதுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்தான் ரேடியோ நிறுத்தப்பட்டிருக்கின்றது.

இதனால் டைட்டானிக் கப்பலில் இருந்து வந்த அபாய அறிவிப்பு (எஸ் ஓ எஸ்), பக்கத்து கப்பலான எஸ்எஸ் கலிபோர்னியனுக்கு வந்து சேரவே இல்லை. இதனால் டைட்டானிக் கடலில் மூழ்கி ஆயிரத்து 523 பேர் இறந்திருக்கிறார்கள்.ரேடியோ இயக்குநர் பிலிப்பும் இறந்து விட்டார். டைட்டானிக் முழுமையாக கடலில் மூழ்குவதற்கு இரண்டு மணி நேரம் ஆகியிருக்கிறது.

இந்த தகவல் மட்டும் 20 மைல்களுக்கு அப்பால் வந்து கொண்டிருந்த எஸ்எஸ் கலிபோர்னியனுக்கு தெரிந்திருந்தால் டைட்டானிக் கில் உள்ள அத்தனை பேரையுமே காப்பாற்றி இருக்கலாமாம்.

த அன்சிங்கபிள் டைட்டானிக் என்ற டாகுமென்டரியில் இந்த தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் இருந்து நியூயோர்க்கிற்கு சென்று கொண்டிருந்த டைட்டானிக், ஏப்பிரல் 14.1912 இரவில் பனிப்பாறையில் மோதியது. மோதிய பின் 2 மணி 40 நிமிடத்தில் அதாவது அடுத்தநாள் அதிகாலையில் அது கடலில் முழுமையாக மூழ்கி இருக்கிறது.

அந்த சமயத்தில் டைட்டானிக் தான், உலகின் மிகப்பெரிய பயணிகள் நீராவி கப்பலாகவும், அதிக தொழில் நுட்பத்தை கொண்டிருந்த கப்பலாகவும் இருந்தது. (ச-5)

## வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்



(கொழும்பு)

அரசாங்க வங்கி ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஓய்வூதியத் திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்க வங்கிகளின் தலைவர்களை நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சந்தித்தபோது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின்போது உழைக்கும் சமுதாயத்தின் உரிமைகளை அரசாங்கம் ஒருபோதும் பறித்து விடாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி இந்த ஓய்வூதியத் திட்டத்துக்காக அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அரசாங்க வங்கி ஊழியர் ஓய்வூதிய நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த நிதியத்தில் சேர்ந்து 10 வருட அங்கத்துவத்தைப் பூர்த்தி செய்தவர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் அனுகூலங்களைப் பெறத் தகுதி பெறுவார்கள் என்றும் ஜனாதிபதி அங்கு மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# இலங்கையில் அரசியல் ரீதியாகவே புலிகளை தோற்கடிக்க வேண்டும்

## இந். கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வு சாத்தியப்படாது எனத் தெரிவித்திருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத், விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாகத் தோற்கடிக்கப்பட வேண்டும் எனத் தெரி வித்துள்ளார்.

'விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதை விடுத்து அரசியல் ரீதியாக அவர்களைத் தோற்கடிக்க வேண்டும்'

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வுகாண முடியாது நியாயமான அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்றை முன்வைத்தால் அதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

'இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு முழு சுதந்திரம் வழங்கும் அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு, இந்திய மத்திய அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும்' என காரத் கூறினார்.

'நாங்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லை. எனினும், தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு அரசியல் தீர்வொன்று அவசியம். இதற்கு மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' எனக் குறிப்பிட்ட அவர், அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு, இந்திய மத்திய அரசாங்கம் இராஜதந்திர ரீதியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். (ச-5)

# தேசிய அடையாள அட்டை தொலைந்தால் பொலிஸ் நிலையத்தில் முறையிட வேண்டும்

## பலாலிப் படைத் தலைமையகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தமது தேசிய அடையாள அட்டைகளைத் தவற விட்டவர்களின் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதுடன் போலியான ஆவணங்களுடன் முறைப்பாட்டின் பிரதியைச் சமர்ப்பித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கப்படுகின்றது என்பது பொலிஸாரின் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பலாலிப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

இது தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருப்பதுடன் முறைகேடான முறையில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

உங்கள் தேசிய அடையாள அட்டை தவறிவிடும் பட்சத்தில் உடனடியாக அது பற்றி அருகிலிருக்கும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டும் என்பதுடன் கீழுள்ள தகவல்களைப் பொலிஸாரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

தவறிய தேசிய அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் வழங்கப்பட்ட திகதி, முறைப்பாடு செய்பவரின் முழுப்பெயர் மற்றும் முகவரி, அடையாள அட்டை வழங்கப்படும்போது அதன் உரிமையாளர் தங்கியிருந்த பிரதேச செயலர் பிரிவு, முறைப்பாடு செய்பவரின் பிறந்த திகதி, பிறந்த இடம், மற்றும் வேறு பெயர்கள், முறைப்பாடு செய்பவருக்கு அடையாள அட்டையின் இலக்கம் ஞாபகமில்லை எனில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் இலக்கம் மற்றும் வழங்கப்பட்ட திகதி, அடையாள அட்டை உரிமையாளரது தாய், தந்தை ஆகியோருடைய முழுப்பெயர்.

பொலிஸாரினால் அது பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதும் முறைப்பாட்டின் பிரதி ஒன்றைப் பெற்று அதனைக் கிராம சேவை அதிகாரியிடம் கையளித்து அவரால் வழங்கப்படும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கிராம சேவை அதிகாரியினதும் பிரதேச செயலரினதும் அனுமதியின் பின்னர் மீண்டும் பொலிஸாரிடம் அதனைச் சமர்ப்பித்து மேற்படி விசாரணைகள் முடிபடைந்ததும் உங்கள் பிரதேச கிராம சேவை அதிகாரியிடம் கையளிக்கவும்.

வேறு ஒருவருக்குச் சொந்தமான தேசிய அடையாள அட்டை ஒன்றை தம்மிடம் வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். வேறு ஒருவருடைய தேசிய அடையாள அட்டை ஒன்றைக் கண்டெடுத்தால் அதனை அருகிலிருக்கும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறு பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் அறிவித்துள்ளது. (எ)

## வடமராட்சியில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

வடமராட்சி கிழக்கு முள்ளியான் பகுதியில் விமானப் படை நடத்திய குண்டுத் தாக்குதலில் பொதுமக்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

முள்ளியான் மக்கள் குடியிருப்புக்கள் மீது விமானப் படையின் மிக்-27 ரக விமானங்கள் நேற்று மாலை 6.05 மணியளவில் இக் குண்டுத் தாக்குதலை நடத்தின.

இதில் பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர். பொதுமக்களின் மூன்று வீடுகள் அழிந்துள்ளன. கால்நடைகளும் அழிந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# ரி.எம்.வி.பி. கட்சிக்குள் தீவிரமடையும் முரண்பாடுகள்

(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் பிள்ளையான் அணியினருக்கும் கருணா அணியினருக்கும் இடையில் உட்கட்சி விரிசல்களும் முரண்பாடுகளும் முற்றி வருவதாகத் தெரிகின்றது.

அக் கட்சியின் மாகாண சபை உறுப்பினரான பிரதீப் மாஸ்டர் தனது அரசியல் அலுவலகத்தைக் கருணா ஆதரவாளர்கள் தாக்கியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

கருணா ஆதரவாளரான ஏறாவூர் பிரதேச சபை உறுப்பினர் அன்புமணி தலைமையில் வந்த ஆயுததாரிகளே தனது அலுவலகத்தைத் தாக்கி, அங்கிருந்தவர்களை விரட்டியடித்ததாக அவர் தெரிவித்தார்.

ஆனால் கருணாவின் உத்தரவின் பேரில் அன்புமணி தலைமையில் சென்றவர்கள் அவ் அலுவலகத்தில் ஒழுக்காற்று நடவடிக்கையைத்தான் மேற்கொண்டிருந்தனர் என்று அம்பாறை மாவட்ட ரி.எம்.வி.பி. பொறுப்பாளர் இனியபாரதி தெரிவித்துள்ளார். (ச-5)




தீபாவளி தினத்தன்று யாழ்.செயலகத்தில் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினரல், யு.என்.டி.பி. அனுசரணையுடன் நடைபெற்ற கிளிரிசீடியா விறகு அடுப்பு அறிமுக விழாவில் யாழ். அரசாங்க அதிபர் உரையாற்றுவதனையும், மேற்படி நிகழ்வில் வட பிராந்திய முகாமையாளர் வ.மகாலிங்கம், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.ஜெயநாதன் ஆகியோர் பயனாளிகளுக்கு கிளிரிசீடியா அடுப்பு வழங்குவதையும் நிகழ்வில் பங்கு பற்றியோரையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## கனவுகள்

"நான் இந்த நாட்டுக்கு ராஜாவாகி விட்டேன்!" என்றார் ஒருவர். "எப்பொழுது?" என்று கேட்டார் இன்னொருவர்.

"நேற்றிரவு தூங்கிக் கொண்டிருந்த போது!" என்றார் அவர். இப்படியான நிகழ்வுகளெல்லாம் கனவில் தான் சாத்தியம். இல்லையானால் எந்தக் காலத்தில் அவர் ராஜாவாகப் போகிறார்?

இந்தக் கனவுகளுக்கெல்லாம் விஞ்ஞான பூர்வ மான விளக்கம் கூறியிருக்கிறார்கள். நமது எதிர்பார்ப்புக்கள் – ஏமாற்றங்கள் – பயங்கள் – சந்தேகங்கள் எல் லாம் நமது உள் மனதில் பதிந்து விடுகிறதாம்.

இந்த உள்மனம் நாம் விழித்துக் கொண்டிருக்கும் போது எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை! ஆனால் நாம் தூங்கும் போது மனதிலுள்ள எண்ணங்கள் எல்லாம் விழித்துக் கொள்கிறது. அது தான் கனவு உண்டாகுவதற்கான அடிப்படையான காரணம்.

கனவுகளைப் பற்றி பல்வேறு ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருந்தாலும் இன்னமும் முழுமையாக அதைப் பற்றி யாரும் அறிந்து கொள்ளவில்லை.

சோவியத் யூனியனில் கனவுகள்ளப் பற்றி ஒரு நரம்பியல் மருத்துவர் ஆராய்ச்சி செய்தார். அவர் 41 ஆயிரம் கனவுகள் வரை ஆராய்ச்சி செய்து பார்த்து சில தகவல்களைச் சொல்லியிருக்கிறார்.

சில நேரங்களில் நல்ல கனவும் சில நேரங்களில் கெட்ட கனவும் வருகிறது. நல்ல கனவு வந்தால் நீங்கள் ஆரோக்கியமாக இருக் கிறீர்கள் என்று அர்த்தம். கெட்ட கனவு வந்தால் உங்கள் உடம்பில் ஏதாவது நோய் இருக்கலாம். அல்லது நோயின் அறிகுறியாக இருக்கலாம்!

ஆழ்ந்து தூங்கும் போது உடம்பின் எல்லாப்பகுதிகளும் மூளையால் உணரப்படுகிறதாம்! ஏதோ ஒரு பகுதி நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அதன் தாக்கம் நரம்பு மண்டலம் வழியாக கனவுகளில் வெளிப்படக் கூடிய சாத்தியம் உண்டு என்கிறார் அவர்.

தான் செய்த ஆராய்ச்சியில் இருந்து இதற்கு ஓர் உதாரணமும் கொடுக்கிறார். ஒரு ஆள் கனவு கண்டாராம். அதாவது கொட்டும் மழையில் முழங்கால் வரைக்கும் "ஷு" அணிந்து கொண்டு மிகவும் சிரமப்பட்டு நடந்து போய்க் கொண்டிருப்பது மாதிரி ஒரு கனவு.

இந்தக் கனவைக் கண்டு விழித்துக் கொண்ட அவர் உடனே பார்க்கும் போது உடம்பு முழுவதும் பாரமாகவும் கால் வலியையும் உணர்ந்தார். இதிலிருந்து என்ன தெரிகிறது? கனவில் கண்ட காட்சிதான் உடம்பில் அந்த வலியை ஏற்படுத்தியிருக்கிறது! இதனால் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது உடம்பின் எல்லா உறுப் புக்களும் கனவுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பது தெளிவாக தெரிகிறது.

ஆனால் எல்லா கெட்ட கனவுகளும் நோய்க்கான அறிகுறி என்று சொல்லிவிடமுடியாது. ஏனெனில் உள் மனதில் பயம், துக்கம், நிம்மதிக் குறைவான தூக்கம் என்பவையும் கூட கெட்ட கனவுகளை உண்டாக்கலாம்.

சிலருக்கு உடம்பில் எந்தவித கோளாறும் இருக்காது! ஆனால் அவர்களுக்கும் சில பயங்கரமான கனவுகள் வரும்! அவர்களெல்லாம் காரணமில்லாமல் ஆத்திரப் படுபவர்களாக இருப்பார்கள். அதிகமாக கோபப்படும் போது நரம்புகள் பாதிப்படையும்! இது கூட பயங்கரமான கனவுகளை உண்டாக்கலாம்.

இப்படி பட்டவர்களுக்கு முடிவேயில்லாத தொடர்ச்சியான கனவுகள்வருவதற்குக் கூட வாய்ப்புகள் உண்டு. சில கனவுகள் ஞாபகத்தில் நிற்பதில்லை. தூக்கத்தில் கண்டதை தூக்கத்துடன் விட்டுவிடுவதே சிறந்தது!

கனவுக்கு பலன் பார்த்துக் கொண்டிருந்தால் நேரம் தான் வீணாகும். நல்ல கனவு கண்டால் நான்கு பேரிடம் சொல்லி சந்தோஷப்படுங்கள். கெட்ட கனவு கண்டால் "கம்" மென்று இருந்துவிடுங்கள்.

ஒருவர் இன்னொருவரைப் பார்த்து, "சேர்..... நேற்று என் கனவில் நீங்கள் வந்து என்னிடம் நூறு ரூபா கடன் வாங்கினீர்கள்!" என்றார்.

"அப்படியா! அப்படியானால் அதை கண்டிப்பாக திருப்பிக் கொடுப்பேன்! என்றார் அவர்.

இவருக்கு சரியான சந்தோஷம். மிகவும் ஆர்வத்தோடு, "எப்பொழுது கொடுக்கப் போகிறீர்கள்!" என்று கேட்டார். "மறுபடியும் நான் உங்கள் கனவில் வரும் போது!" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புலமை பரிசில் பரீட்சையின் தகைமையில்

## 6 ஆம் தரத்திற்கு அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை

## கல்வி அமைச்சின் செயலாளர் தகவல்

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து 2009 ஆம் ஆண்டு 6ஆம் தரத்திற்கு பிற பாடசாலைகளில் அனு மதி பெறுவதற்கான வெட்டுப் புள்ளிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லையென கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் கே. மொஹமட் தம்பி நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, 2009 ஆம் ஆண்டு 6 ஆம் தரத்திற்கு பிற பாடசாலைகளுக்கு 2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேற்றிற்கமைய தமிழ் மொழி மூல மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான பாடசாலைகளின் வெட்டுப்புள்ளிகள் பற்றிய செய்தி பத்திரிகையில் வெளியாகியுள்ளது. இச்செய்திதவறானதாகும்.

மேற்படி விடயம் தொடர்பாக மாணவர்களை 2009 இல் 6 ஆம் தரத்திற்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் கடந்த 21ஆம் திகதி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் உரிய பாடசாலை அதிபர்களுக்கு வழங்கு வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட் டிருந் தது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் படிவங்களை அதிபர் இம்மாதம் 14 ஆம் திகதிக்கு முன் கல்வியமைச்சின் பாடசாலைச் செயற்பாட்டுக் கிளைக்கு கிடைக்கத் தக்கதாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற பின்னரே 2009 ஆம் ஆண்டு 6 ஆம் தரத்திற்கு புலமைப் பரிசில் தகைமை பெற்ற மாணவர்களை சேர்ப்பதற்கான புள்ளிகள் தீர்மானிக்கப்படும். தற்போது வழங்கப்பட்டுள்ள படிவம் A இன் பிற்பக்கத்தில் சென்ற வருடம் (2007 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேற்றிற்கமைய 2008 ஆம் ஆண்டு 6ஆம் தரத்திற்கு அனுமதிப்பதற்காக தீர்மானிக் கப்பட்ட வெட்டுப்புள்ளிகள் பெற்றோர்கள் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்வதற்கு உதவும் வகையில் வழங்கப்பட்டுள்ளது).

2009 ஆம் ஆண்டு ~~6~~ஆம் தரத்திற்கு புலமைப் பரிசில் பரீட்சையில் தகைமை பெற்ற மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப் புள்ளிகள் இன்னும் தீர்மானிக் கப்படவில்லையென்பதை கருத்திற் கொள்ளவும். (ஓ-5)

# மாற்று ஆற்றலுள்ளோர் தின வலய மட்ட போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகினால் இணுவில் மத்திய கல்லூரியில் கடந்த இரண்டாம் திகதி வலய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளின் முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெற்று முதலாம் இடத்தை பெற்றவர்களின் நிகழ்ச்சிகள் (இசை, நடனம், நாடகம், நாட்டிய நாடகம், வில்லுப் பாட்டு நவம்பர் மாதம் இறுதியில் நடைபெறவுள்ள உலக மாற்று ஆற்றலுள்ளோர் தின விழாவில் மேடையேற்றப்படும் எனவும் வெற் றி பெற்ற மாணவர்களுக் கான பரி சில்களும் சான்றிதழ்களும் அன் றைய தினம் வழங்கப்படும் எனவும் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மாற்று ஆற்றுலுள்ளோர் தினப் போட்டி - 2008 முதல் மூன்று இடங் களைப் பெற்றோர் விபரம்.

**பேச்சு - பிரிவு I**

தி. கீர்த்தனா - வட்டுமத்திய கல்லூரி, கி. கீர்த்தனா – சங்குவேலி அ. த. க. பாடசாலை, பு. யஸ்மிதா – இளவாலை கன்னியர் மடம் ம.வி.

**பிரிவு - II**

வி. ஸ்ரீசுபாங்கி – வட்டு மத்திய கல்லூரி, சா. தேனுஜா – இளவாலை கன்னியர்மடம் ம.வி., கே. கௌசிகன் – மகாஜனாக் கல்லூரி.

**பிரிவு - III**

ச. ஜேனுஷா - வட்டு இந்துக் கல்லூரி, ர. யசாந்தினி – ஆனைக் கோட்டை றோ.க. த.க பாடசாலை, உ. துஷ்யந்தினி – நவாலி மகா வித்தி.

**பிரிவு - IV**

பொ. றசாத் – பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சி. சிந்து – இணு வில் மத்திய கல்லூரி, பொ. கிரு ஷாந் – சங்கானை சிவப்பிரகாச ம. வித்தி.

**கவிதை - பிரிவு I**

ஜெ. பிரசாந்தி – இணுவில் இந்துக் கல்லூரி, அ. அனுஷன் - அராலி முருகமூர்த்தி வித்தி, அ. மேரிவிதுஜா – இளவாலை கன்னி யர்மடம் ம.வி.

**பிரிவு -II**

பா. வர்சனா - விக்ரோறியாக் கல்லூரி, சி. கம்ஷாயினி – இணு வில் இந்துக்கல்லூரி, சி. விதுசா – சங்கானை சிவப்பிரகாச ம.வி.

**பிரிவு - III**

வ. ரிசாந்தினி – ஆனைக்கோட்டை றோ.க.த.க, சி. சுமிதா - ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணி வித்தி, சு. சுயாத்தா – யூனியன்கல்லூரி.

**பிரிவு -IV**

சி. ஜெயரூபி - வட்டு மத்திய கல்லூரி, வ. தனுசாந்தி - விக்ரோறியாக் கல்லூரி, த. கல்யாணி – இணுவில் மத்திய கல்லூரி.

**கட்டுரை - பிரிவு I**

க. டக்சிகா - இணுவில் இந்துக் கல்லூரி, மோ. ஆரபி - மல்லாகம் கனிஷ்ட வித்தி, க. அபர்ணா – சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**பிரிவு - II**

நி. நிதர்சினி – ஆனைக்கோட்டை றோ.க.த.க., செ. கீர்த்திகா – சங்கானை சிவப்பிரகாச ம.வி., ம. இனியாள் – மகாஜனாக் கல்லூரி.

**பிரிவு - III**

கி. ரினேக்கா – ஆனைக்கோட்டை றோ.க.த.க, செ. சுகிதா – ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி, றெ. சிந்துஜா – இளவாலை கன்னியர்மடம் ம.வி.

**பிரிவு - IV**

க. தாரணி – இணுவில் மத்திய கல்லூரி, நா. சுஜிதா – வட்டு மத்திய கல்லூரி, மு. வினோத் – மானிப்பாய் இந்துக்கல்லூரி.

**இசைதனி - பிரிவு II**

வி. கல்யாணி – இணுவில் மத்திய கல்லூரி, ற. நிஷா – இராமநா தன் கல்லூரி, அ. சண்முகப் பிரியன் – யூனியன் கல்லூரி.

**பிரிவு - III**

க. தசாங்கன் – யூனியன் கல் லூரி, ச. ரசிகரன் – வட்டு இந்துக் கல் லூரி, கே. கோபிகா – மானிப் பாய் மெமோரியல் ஆங்கில பாட சாலை.

**பிரிவு - IV**

அ. அமிர்த சிந்துஜன் - இணுவில் மத்தியகல்லூரி, அ. ஆகன்யா - யூனியன் கல்லூரி, து. துஸ்யந்தினி – இராமநாதன் கல்லூரி.

**இசை குழு - பிரிவு II**

யூனியன் கல்லூரி, இணுவில் மத்தியகல்லூரி,இராமநாதன்கல்லூரி.

**பிரிவு -III**

இராமநாதன் கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி, ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணி வித்தி.

**நடனம் தனி - பிரிவு IV**

க. தர்மிகா – சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, பி. மேரிஜன் றபேக்கா – பண்டத்தரிப்பு பெண்கள் உ. த. பாடசாலை, க. மிருணாளினி – விக்ரோறியாக் கல்லூரி.

**நடனம் குழு - பிரிவு II**

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை, விக்ரோறியாக் கல்லூரி, இளவாலை கன்னியர் மட ம் ம.வி.

**பிரிவு - III**

பண்டத்தரிப்புபெண்கள்உ.த.பாடசாலை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி, வட்டு மத் திய கல்லூரி.

**திறந்த போட்டி - நாடகம்**

இளவாலை மெய்கண்டான் ம.வி., இராமநாதன் கல்லூரி, வட்டு இந்துக்கல்லூரி.

**திறந்த போட்டி - நாட்டிய நாடகம்**

இணுவில் மத்திய கல்லூரி

**திறந்த போட்டி - வில்லிசை**

யூனியன் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆ. பாடசாலை, மல்லாகம் ம. வித்தி. (ஓ-6)

# இராசி பலன்

04.11.2008
(ஐப்பசி 19, செவ்வாய்க்கிழமை)
பூராடம் முற்பகல் 8.56 மணிவரை
ஷஷ்டி பிற்பகல் 3.44மணிவரை
இராகு காலம் 3.04 - 4.34மணிவரை
சுபநேரம் 10.34 -12.04 மணிவரை
கந்தஷஷ்டி விரதம்

| | |
|---|---|
| மேடம் | கட்டுப்பாடு, பிரயாணம், சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு. |
| இடபம் | வீண்பகை, காரிய தடங்கல், பொருள் விரயம், ஆரோக்கியக் குறைவு. |
| மிதுனம் | தேகநலன், முயற்சிகைகூடும், களஸ்திர நன்மை, சத்துரு ஜெயம். |
| கடகம் | உற்சாகம், எடுத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | தொழில் மந்தநிலை, குடும்பக் கவலை, பணக் குறைவு, கௌரவக் குறைவு. |
| கன்னி | உறவினர் சந்திப்பு, உடல் நலக் குறைவு, தன்னம்பிக்கைகுறைவு, தொழில் ஆரம்பம். |
| துலாம் | இனிய சம்பவம், உறவினர் வருகை, கூட்டு முயற்சி, கீர்த்தி. |
| விருச்சிகம் | தனவிரயம், மனோசங்கடம், முயற்சி தாமதம், போசனசுகக் குறைவு. |
| தனுசு | தெய்வசிந்தை, நல்ல முயற்சி, தேகநலன், சயன சுகம். |
| மகரம் | புத்திரரால் கவலை, பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம், சோம்பல் நிலை. |
| கும்பம் | காரிய சித்தி, உடல் நலம், தன தானிய சேர்க்கை. |
| மீனம் | நன்கொடை, ஆரோக்கியம், முயற்சி கைகூடும், தூர தேசச் செய்தி. |

வளவன்

## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக 2002-2004 கல்விமாணிப் பட்டதாரிகளுக்கு பட்டமளிப்பு விழா நவம்பர் மாதம் 18 ஆம்திகதி பண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான மேலங்கிகளை 17 ஆம் திகதி பற்றுச்சீட்டு அழைப்புக் கடிதம் என்பவற்றுடன் மஹரகம தேசிய கல்வி நிறுவகத்திற்கு சென்று பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என சிரேஷ்ட விரிவுரையாளரும் பிராந்திய இணைப்பாளருமான திருமதி த.வில்வநாதன் அறியத் தந்துள்ளார். (ஓ)

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்க நிறுவனம் பாடசாலை மாணவர்களுடன் இணைந்து நடத்தும் ''புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்'' எனும் தலைப்பிலான கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 2.30 மணி வரை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற உள்ளது. இதில் நாடகமும் அரங்கியலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயனடையலாம் எனத் தெரிவிக் கப்படுகிறது. (ஓ)

## நிறுவனத் தலைவர்களிற்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர் வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப் படும் மாதாந்த இதழான ''ஞானச்சுடர்'' ஐப்பசி மாத இதழ் வெளிவந்துள்ளது. (ஓ)

## ஆன்மீக நிகழ்வு

(பருத்தித்துறை)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் இடம்பெறும் ஆன்மீக நிகழ்வுகளில் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு செல்வி ஷாமினி மனோகரக் குருக்களின் இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஓ)

# வேலணைப் பிரதேச சபையின் உள்ளூராட்சிவார இறுதிநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தீவகம் தெற்கு வேலணைப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேவா திறந்த வெளியரங்கில் பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திர லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன், வேலணை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரி.மீரா, உள்ளூராட்சி சனசமூக் அபிவிருத்தி அலுவலர் சி.பகீரதன், உள்ளூராட்சி ஆய்வு அலுவலர் வி.பரமேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வேலணைப் பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆ.திருநாவுக்கரசு, ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயப் பிரதம குரு கயிலை வாமதேவக் குருக்களின் ஆசியுரையும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் 18 வருடம் சிறப்பாகச் சேவையாற்றிய பொ. கருணாசேகரன், க.சண்முகம், இ.சுப்பிர மணியம், த.உதய குமார், இ.பேரின்பநாதன் ஆகியோருக்கு பொற்கிளி வழங்கி பொன் னாடை போர்த்தி ''சிறந்த உள்ளூராட்சிச் சேவையாளன்'' விருதும் இ.பேரின்பநாத னுக்கு பசுமைப்புரட்சியாளர் விருதும் இ.சற் குணநாதன் ,என். இராமச்சந்திரன் ஆகியோருக்கு ஊடகவியலாளர்களுக்கான கலைச் சுடர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்படும்.

சிறந்த சுகாதாரத் தொழிலாளர்களுக்கான விருது க.சண்முகத்துக்கும் வழங்கப் படவுள்ளன. மற்றும் சிறந்த நிர்வாக அதிகாரிக்கான விருது சிறந்த சனசமூக நிலையங்களுக்கான விருதுகள் உள்ளூராட்சி வார கலைவிழா கருத்தரங்கில் பங்குபற்றியோர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட வுள்ளன. (6-134)

# வெளிநாடுகளில் கலை நிகழ்வுகளை நடாத்தும் திருமறைக் கலாமன்ற 'வானவில்' கலைக்குழுவினர்

(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவங்களை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லும் திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பயணங்களின் தொடர்ச்சியாக மற்றுமொரு கலைக்குழுவினர் கலைப் பயணத்தை மேற்கொண்டு கடந்த ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி வெளிநாடுகளுக்கு பயணமாகியுள்ளனர்.

திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகள், பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் ஆகியோருடன் சென்றுள்ள இக் கலைக்குழுவினருக்கு ''வானவில்'' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

'வானவில்' குழுவினர் வெளிநாடுகளில் அந்தந்த நாடுகளில் இயங்கும் திருமறைக் கலாமன்றங்களுடன் இணைந்தும், தனித்தும் பல்வேறு கலைநிகழ்வுகளை தற்போது நடத்தி வருகின்றார்கள்.

இவற்றில் நாடக, நடன அளிக்கைகள், அரங்கப் பட்டறைகள், நூல்வெளியீடுகள் என்பன அடங்கும்.

இதுவரை ஜேர்மனி,பிரான்ஸ்,இத்தாலி, லண்டன் உட்பட பல நாடுகளில் கலை நிகழ்வுகளை நடத்தியுள்ள 'வானவில்' குழுவினர் தொடர்ந்தும் பல நாடுகளில் கலைநிகழ்வுகளை நடத்திய பின் இம் மாத இறுதியில் நாடு திரும்பவுள்ளார்கள். (ஓ)

# உலக உணவுத் திட்ட கல்விக்கான உணவுப் பொருள் வழங்கல்

உலக உணவுத்திட்ட 3ஆம் தவணை மிகுதி 20 நாட்களுக்கான உணவுப் பொருள் வழங்கலின் கீழ் வழங்கற் கட்டளை மாவட்டச் செயலகத்தினால் கடந்த மாதம் 31 ஆம் திகதி முதல் சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே இதுவரை வழங்கல் கட்டளையைப் பெற்றுக்கொள்ளாத ப.நோ.கூ.சங்கங்கள் வழங்கற் கட்டளையை மாவட்டச் செயலகத்திலிருந்து பெற்று 7 ஆம் திகதிக்கு முன்னர் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருட்களை முழுமையாகப் பெற்றுக் கொள்ளுமாறு திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

மேலும் 10 ஆம் திகதிக்குள் சகல பாட சாலைகளுக்கும் உணவுப் பொருட்களை விநியோகித்து முடிக்குமாறும் 10 ஆம் திகதிக்கு முன்னர் உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ளாத பாடசாலைகள் தமது வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக தமக்கு அறியத் தருமாறும் திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபாலை தெற்கு கிராமசேவையாளர் பிரிவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நாளை மறுதினம் வியாழக் கிழமை பிற்பகல் 2மணிக்கு இருபாலை தெற்கு பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு அன்னத்து மாதர்சங்க உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (6-134)

## ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்

(நல்லூர்)

நல்லூர் பிரதேசசபை கொக்குவில் பொதுநூலகத்தால் நடாத்தப்படும் ஒரு புத்தகம் ஒரு சமுதாயம் எனும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நல்லூர் பிரதேசசபை செயலாளர் மே.சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூல் ஆய்வுரையை கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் என்.விஜயசுந்தரம் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வு கடந்த 30 ஆம்திகதி நடைபெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)




## சிறுவர் நாடகம் மேடையேற்றம்

செயல்திறன் அரங்க இயக்க ஆற்றுகையில் இன்று குழந்தை ம.சண் முகலிங்கன் எழுதி நெறி ஆய்வு செய்த ''கூடி விளையாடு பாப்பா'' எனும் சிறுவர் நாடகம் தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையில் 9 மணிக்கு மேடை ஏற்றப்படவுள்ளது. (ஓ-35)

## நேர்முகத்தேர்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பொறுப்பில் உள்ள 5 குழந்தைகளை தத்து எடுப்பதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பத்துடன் அனுப்பிய ஆவணங்களின் மூலப்பிரதிகள், உறுதிப்படுத்தப்பட்ட அதன் புகைப்படப் பிரதிகள் ஆகியவற்றுடன் கணவன் ,மனைவி இருவரையும் சமுகம் கொடுக்குமாறு நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார். (ஓ-29)

## இலவச மருத்துவ முகாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அல்லாரை அ.த.க. பாடசாலையில் நடைபெறும் என்றும் கண், நீரிழிவு, குருதி அமுத்தம், பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் கழக செயலாளர் எஸ்.கே. நவரத்தினம் தெரிவித்தார். இம் முகாம் இம் மாதம் முதலாம் திகதி நடாத்தப்பட இருந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களால் திகதி பிற்போடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## முன்பள்ளி மாணவர்களுக்கான உணவுப்பொருள் விநியோகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான 3 மாதத்திற்குரிய உணவுப் பொருட்கள் சபை ஊடாக போரூட் நிறுவனத்தினரால் விநியோகிக்கப் படுகிறது.

கடலை, அவல், ரவை,சீனி, பயறு, ஜீவாகாரம் ஆகிய பொருட்களே விநியோகிக்கப்படுகின்றது. அந்தந்த முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ளலாம் என அறியத் தரப்பட்டுள்ளது. (ஓ-29)





சாவகச்சேரி சங்கத்தானை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இளையநிலா சிறுவர் கழகமும் இணைந்து நடாத்திய சிறுவர் தின விழாவில் விருந்தினரான தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தலைவர் லயன் எஸ். சரவணமுத்து உரையாற்றுவதையும், அங்கு இடம்பெற்ற நாடகத்தின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை (144)



## டொனமூர் திருத்தம் பற்றிய விவாதம்

ஒரு சிலருக்கு வாக்குரிமை இருந்த காலத்தில் கட்சிகள் இருக்கவில்லை. சன நாயக ஆட்சிக்கு இன்றியமையாத கட்சிகள் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட பின்னரே உருவாகச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. டொனமூர் திருத்தக் குழுவினருக்குப் பதினெட்டாண்டுகளுக்குப் பின் வந்த சோல்பரிக் குழுவினர், வாக்குரிமையைக் கட்டுப்படுத்துவதை விரும்பாமையால் முந்திய முறை நல்லது என அவர்களும் கருதினர் என்றே கொள்ளல்வேண்டும்.

பல்லாண்டுகள் டொனமூர் அமைப்பில் மந்திரியாராயும், பின்னர் சோல்பரி அமைப்பில் மந்திரியாராயும், எதிர்க்கட்சித் தலைவராயும், பிரதமராயும் இருந்த திரு S.W.R.D பண்டாரநாயக்க இலங்கைக்கு நிர்வாக சபை முறையே நல்லது என்று கூறியுள்ளார். அதில் உரிமையுண்டு. அவருடைய அனுபவத்தைக் கொண்டே அவர் கூறியுள்ளார். இலங்கையில் சட்டத்துறை நாயகமாயும் பிரதம நீதியரசராயும் இருந்த சேர். அன்ரன் பேற்றம் அவர்களும் நிர்வாக சபை முறை நல்லது என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதில் உள்ள ஓர் அந்தரங்க உண்மையையும் நாம் இங்கே அறிந்து கொள்ளுதல்வேண்டும். பிற்காலத்தில் நடந்த பாராளுமன்ற முறையிலமைந்த மந்திரசபைகளிலே எல்லோரும் பிரதம மந்திரியார் வழி ஒழுக்கெறும்புபோலப் போகவில்லை. எல்லோரும் ஒருவருக்கு என்றும், ஒருவர் எல்லோருக்கும் என்ற முறை திருப்திகரமாக நடைபெறவும் இல்லை.

### மீன் பார்வை

அதற்கு உதாரணம் மூத்த சேனநாயக்கவின் மந்திரத்தில் பண்டார நாயக்க ஒத்துப்போகவில்லை. டட்லியின் அரசாங்கத்தில் கொத்தலாவல ஒத்துப் போகவில்லை. கொத்தலாவலவின் ஆட்சியில் R.G. சேனநாயக ஒத்துப்போகவில்லை. பண்டாரநாயக்கவின் முன்னணியில் பிலிப் , விலியம் சில்வா ஒத்துப்போக வில்லை. இப்படியே இவர்களுக்குப் பின் வந்தவர் அரசாங்கங்களிலும் முட்டுக்கட்டைகள் இருந்தன.

இனி பேராசிரியர் I.D.H. வீரவர்த்தனா கூறுவது போல டொனமூர் நிர்வாக சபைகளில் பிழைகள் இல்லாமற் போகவில்லை. ஆனாற் காரியங்கள் தடைப்பட்டமைக்குக் காரணம் மந்திரிமார் சிலர் விவேகம் இல்லா தவராய் இருந்தமையும் பகிரங்க சேவையின் அமைப்புப் பிழையாய் இருந்தமையுமேயாம் நிர்வாக சபையின் பிழைக்குக் காரணம் மந்திரிமார் ஒற்றுமை இல்லாதிருந்தமையும் அவர்கள் ஒற்றுமையின்மைக்குக் காரணம் அவர்கள் போட்டி மனப் பான்மையுமே அல்லது வேறில்லை.

சட்ட சபை அங்கத்தவர் பெரும்பான்மையினர் டொனமூர் திருத்தத்தை எதிர்த்த விபரத்தை ஆள்பதி ஸ்ரான்லி குடியேற்ற மந்திரியார் பஸ்வீல்ட் பிரபுவுக்குத் தெரிவித்தார். அத்தோடு தமது அபிப்பிராயத்தையும் அறிவித்தார். அவற்றை எல்லாம் படித்த பஸ்வீல்ட் டொனமூர் அமைப்பில் சில மாற்றங்கள் செய்தார். அவர் செய்த மாற்றங்கள் பின்வருவன வாகும்.

1. பெண்கள் வாக்குரிமை பெறும் வயது 30 என்றிருந்த விதியை நீக்கி அவர்களுக்கு ஆண்களைப் போல 21 வயதில் வாக்குரிமை அளிக்கப்பட்டமை.

2. தொகுதிவாரியாக 65 அங்கத்தவர் தெரியப்படலாம் என்று இருந்ததை 50 ஆகவும், 12 அங்கத்தவர் நியமிக்கப்படலாம் என்பதை 8 அங்கத்தவரே நியமனம் பெறலாம் எனவும் திருத்தப்பட்டமை.

3. காலத்துக்குக் காலம் கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் அரசாங்க சபைக் கூட்டங்கள் நடைபெறலாமென டொனமூர் குழுவினர் தகவுரை கூறியதை நடைமுறையில் செய்ய அனுமதிக்கலாம்.

கொழும்பில் உள்ள அரசாங்க சபை மண்டபத்தில் கூடுவதை விட்டுக் காலத்துக்குக் காலம் கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் அரசாங்க சபை வைகல்கள் நடைபெறலாம் என டொனமூர்க் குழுவினர் ஏன் வற்புறுத்தினார்கள் என்பது இங்கே விளங்கிக் கொள்ள வேண்டிய விடயமாகிறது. கண்டிச் சிங்களவர் இலங்கையைத் திரிசிங்கள எனவே என்றும் கருதினர். முன்னர் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இராசதானிகள் இருந்தமையைக் கருதி அவர்கள் டொனமூர் ஆணைச் சபையினர் முன் ஒரு சமஸ்டி அரசியலமைப்பையே கேட்டார்கள்.

### க.சி.குலரத்தினம்

தங்கள் செல்வங் கொழிக்கும் சிங்காரச் சீமையாகிய மலைநாட்டு வருமானத்தைக் கொண்டு இலங்கையின் ஏனைய பாகங்கள் வெகுவாக முன்னேற்றமடைதலையும் தங்கள் பகுதிகள் பின்தங்கிய நிலையில் கவனிப்பாரற்றுக் கிடந்ததையும் அவர்கள் கண்டு வருந்தியே சமஸ்டி அரசமைப்பைக் கேட்டார்கள்.

அப்படியானால் தங்கள் தேவைகளைத் தாங்களே நிறைவு செய்யலாம் என அவர்கள் கருதினார்கள் போலும். (தொடரும்)



வல்வை றோ.க.த.க. பாடசாலை மற்றும் வல்வை அ.மி.த.க. பாடசால்ல ஆகிய இரு பாடசாலைகளும் இணைந்து நடாத்திய வாணிவிழா பூஜை நிகழ்வுகளில் வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா, பாடசாலை அதிபர் நா.கண்ணதாசன், பூ.சக்திவேல் ஆகியோர் கலந்துகொள்வதையும்,

மாணவர்களின் கலைநிகழ்வையும், பங்குபற்றிய மாணவர்களுடன் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் நீதிமன்ற அமைப்பு (2)



1.3 ஜனாதிபதி தொடர்பாக உள்ள ஆலோசனை சார்ந்த நீதிமன்ற அதிகாரங்கள்.

1.4 பாராளுமன்றத்தினால் கட்டளையிடப்படும் விடயங்கள் தொடர்பான உப விதிகளை தயாரிப்பதற்கான அதிகாரங்கள்

1.5 பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் தொடர்பான வாக்குகளை விசாரிக்கும் அதிகாரங்கள்.

1.6 அடிப்படை உரிமைகளை மீறுதல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்கள்.

1.7 ஜனாதிபதி தேர்தல் மற்றும் கருத்துக் கணிப்பு தேர்தல் மனுக்களை விசாரிக்கும் அதிகாரங்கள்.

1.8 விசேட சந்தர்ப்பங்களில் (WRIT) கட்டளைகளை வழங்குவதற்கான அதிகாரங்கள்.

*இந்த அதிகாரங்கள் விபரமாக கீழே காட்டப்பட்டுள்ளது.*

*1.1 அரசியலமைப்பிற்கு வரைவிலக்கணம் கூறும் அதிகாரங்கள்.*


அரசியலமைப்பிற்கு வரைவிலக்கணம் கூறும் அதிகாரங்கள் என்பது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் சட்டவரைபு மசோதாக்கள் அரசியலமைப்பிற்கு ஏற்புடையதாக இருக்கின்றதா என்று உயர்நீதிமன்றத்தினால் பிரகடனப்படுத்துதலாகும்.

*1.2 இறுதியான மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரங்கள்.*

என்பது, ஏனைய நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்பட்டு சகல குடியியல் மற்றும் குற்றவியல் மேன்முறையீடுகளில் இறுதியான மேன்முறையீடு உயர்நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படும்.

*1.3 ஜனாதிபதி தொடர்பாக உள்ள ஆலோசனை சார்ந்த நீதிமன்ற அதிகாரங்கள்.*

ஜனாதிபதி தொடர்பாக உள்ள ஆலோசனை சார்ந்த நீதிமன்ற அதிகாரங்கள் என்பது ஜனாதிபதியினால் உயர் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தை அறிவதற்கு அனுப்பப்படுகிற ஏதாவதொரு சட்டம் சார்ந்த அல்லது செயல் சார்ந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு உயர்நீதிமன்றம் தன்னுடைய கருத்தை அறிவிக்கும்.



"கொழும்பு 12 , அளுத்கடை பிரதேசத்தில் அமைந்துள்ள உயர்நீதிமன்றம்"

*1.4 பாராளுமன்றத்தினால் கட்டளை இடப்படும் விடயங்கள் தொடர்பான உப விதிகளைத் தயாரிக்கும் அதிகாரங்கள்.*

பாராளுமன்றத்தினால் கட்டளை இடப் படும் விடயங்கள் தொடர்பாக உபவிதி களைத் தயாரிக்கும் அதிகாரங்கள் என்பது கீழ் நீதிமன்றங்கள் மற்றும் வழக்கறிஞர்கள் தொடர்பாக ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல் பொதுவாக இந்த ஒழுங்கு விதிகள் உயர் நீதிமன்ற ஒழுங்கு விதிகள் என அழைக் கப்படும்.

*1.5 பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரங்கள்.*

பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரங்கள் என்பது 1953 ஆம் பாராளு மன்ற சிறப்புரிமைகள் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுபவர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்தல்.

*1.6 அடிப்படை உரிமைகளை (Fundamental Rights) மீறுதல் தொடர்பான வழக்குளை விசாரணை செய்யும் அதிகாரங்கள்.*

அடிப்படை உரிமைகளை மீறுதல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரங்கள் என்பது அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்றுதல் சார்பான அல்லது நிர்வாக விடயங்களில் ஏதாவதொரு அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருந்தால் அல்லது மீறப்படுவதற்கு ஏதுவாக இருப்பின் அதுபற்றி விசாரணை செய்து தீர்ப்பளிக்கும்.

### வழக்குரைஞர் சாறுக்க சமரசேகர

*1.7 ஜனாதிபதி தேர்தல் மற்றும் மக்கள் கருத்துக்கணிப்பு தொடர்பான தேர்தல் மனுவை விசாரிக்கும் அதிகாரங்கள்.*

ஜனாதிபதி தேர்தல் மற்றும் மக்கள் கருத்துக்கணிப்பு தொடர்பான தேர்தல் மனுவை விசாரிக்கும் அதிகாரங்கள் என்பது ஜனாதிபதி தேர்தலில் அல்லது மக்கள் கருத்துக் கணிப்பில் நடைபெறும் முறையற்ற செயல்களுக்கெதிராக கொண்டு வரப்படும் தேர்தல் மனுவை விசாரணை செய்தல் . (தொடரும்)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- தமிழ்மொழியும் இலக்கியமும் II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**(01) பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சுருக்கமான விடை தருக**

01. "கண்ணீருங்கம்பலையும்" என்ற இணை மொழித் தொடரைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைக்குக.
02. இன்று பல சொவ்ட் வெயார்களை (Soft ware) மலிவாகப் பெற்றுக் கொள்ளமுடிகிறது. இங்கு வந்த சொவ்ட் வெயார் என்பதன் தமிழ்ச் சொல் யாது?
03. "உழவன் வயலை உழுதான்" இதனை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றியெழுதுக.
04. ஐம்புலன்களும் எவை?
05. "குடி" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.
06. இயற்கை நிகழ்வொன்றின் மீது கவிஞன் தன் கருத்தை ஏற்றிக் கூறுவது எவ்வாறு அழைக்கப்படும்?
07. விவாதக் குழுவொன்றின் தலைவரது பிரதான வகிபங்குகள் இரண்டினைத் தருக?
08. உரத்து வாசிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் இரண்டினைத் தருக.
09. "வெண்ணிலா தண்ணொளி வீசியது" இங்கு இடம் பெற்றுள்ள எழுவாய் அடைமொழி யாது?
10. "செய்திகள் வாசிப்பது செல்வகுமார்" இவ்வாக்கியத்தை வழு நீக்கி எழுதுக.

**(02) பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

அ. "இலங்கையின் முன்னேற்றத்திற்குக் கிராமங்களின் அபிவிருத்தியின் அவசியம்" என்பது பற்றிய உமது கருத்து வெளிப்பாடு.

ஆ. இன்று தமிழில் ஏராளமான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. அவற்றை வாசிப்பதனாலேயே ஏராளமான விடயங்களை அறிந்து கொள்ள முடிகிறது ஆனாலும் இன்றைய மாணவர்களின் கவனம் இலத்திரனியல் ஊடகங்களின் பக்கமேயுள்ளது.இவ்விலத்திரனியல் ஊடகங்களினூடாகவும் பல அறிவு சார் விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் ஆயினும் மாணவரிடையே இன்று வாசிப்பு மற்றும் எழுத்தாற்றல் போன்றன கீழ் நிலையடைய இவையே காரணம் என்ற கூற்றையும் மறுப்பதற்கில்லை. இவற்றை அடிப்படையாகக் கொண்டு இன்றைய மாணவர் மீதான ஊடகத்துறையின் தாக்கம் பற்றி ஒரு விமர்சனக்கட்டுரை .

இ. உமது மனதைக் கவர்ந்த மாலைப் பொழுதிலே நீர் கண்ட காட்சிகளின் வருணனை.

ஈ. "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற பழ மொழிக்குப்பொருத்தமான ஒரு கற்பனைச் சிறுகதை.

**(03) பின்வரும் உரைப்பகுதியின் சாரம்சத்தை மூன்றில் ஒன்றாகச் சுருக்கி யெழுதுக. நீங்கள் பயன்படுத்திய சொற்களின் எண்ணிக்கையைக்குறிப்பிடுக.**

எழுத்துக்களாற் சொல்லும் சொற்களால் மொழியும் அமைகிறது. மொழி வளர்ச்சியின் அளவுகோலைக் கொண்டே சில சமயம் அந்த மொழியைப் பேசுகின்ற மக்களின் மன வளர்ச்சியும் வாழ்க்கை முன்னேற்றங்களும் கணிக்கப்படுவதும் உண்டு. ஏனெனில், மக்களின் வாழ்க்கைச் சூழல், சிந்தனைத்திறன், முயற்சி, வேகம் ஆகியவற்றை அடியொற்றியே அவர்களின் முன்னேற்றம் அமையும். அந்த முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் வேக முடுக்கியாக இயங்கி வருவது மொழியும் அம் மொழியின் வளர்ச்சிக்கு ஆதாரமான சொற்களின் பெருக்கமும் ஆகும். வளர்ச்சிப் போக்கில் புதிய கருத்தையோ அல்லது உணர் வையோ ஏதேனும் ஒரு சொல்வடிவில் மனிதன் மற்றவர்க்கு உணர்த்த முற்படுகிறான். இவ்வாறு கருத்துஉணர்த்தும் புதிய சொல் காரண அடிப்படையில் அமைந்த சொல்லாகவோ அல்லது அடையாளங் காட்டும் இடு குறியாகவோ அமையலாம்.

மேலும் ஒரு பகுதியினர் வேறொரு பகுதியைச் சார்ந்த வேறு மொழி பேசும் மக்களோடு உறவாடும் போது அவர்களிடமிருந்து புதிய செய்திகளை அல்லது கருத்துக்களைப் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. அத்தகைய கருத்தையோ செய்தியையோ குறிக்கும் சொற்களும்இயல்பாகவே அவர்தம் மொழியில் இடம் பெறநேர்கின்றது.

இவ்வாறே ஒவ்வொரு மொழியும் தனக்குத்தானே உருவாக்கிக்கொள்ளும் சொற்களோடு பிற மொழிச் சொற்களையும் காலப் போக்கில் ஏற்றுக் கொண்டு வளர்கின்றது. இவ்வாறு ஒரு மொழியில் வந்து சேரும் சொற்கள், எந்த மொழியிலே வந்து சேர்கின்றதோ அந்த மொழியின்இயல்புக்கும் இலக்கண விதி முறைக்கும் ஏற்பத் திருத்தீங்களைப் பெற்றுச் செம்மை அடைக்கின்றன காலப் போக்கில் இத்தகைய சொற்கள் அம் மொழியின் மூலச் சொற்கள் போன்ற தோற்றத்தையும் பெற்று விடுகின்றன.

**(04) பின்வரும் செய்யுளைப் படித்து அதன் கீழுள்ளவினாக்களுக்கு விடை தருக.**

கோவிலில் மணிக ளார்ப்பக் குயிலினம் வரவு கூறச்
சேவல்கள் சிறுகு கொட்டிச் செகத்தினை விழிக்கச் செய்ய
பாவிய ருள்ளம் போலும் கங்குலும் பதுக்கங் கொள்ளத்
தேவர்க்கும் தேவ னாவான் பகலவன் தேரில் வந்தான்.

1. இப் பாடலில் வர்ணிக்கப்படும் காட்சி யாது.
2. இப் பாடலில் இடம் பெறும் அணிகளை விளக்குக.
3. பொருள் தருக.
   அ. செகம்
   ஆ. கங்குல்

**(05)** உமது பிரதேசத்தின் வீதிச் சீர்கேடு காரணமாக பிரதேச மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டி வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவருக்கு 80-100 சொற்களில் அமையுமாறு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

உமது பாடசாலையில் நடந்து முடிந்த நூலக வாரத்தை நெறிப்படுத்திய வாசிப்பு மன்றத்தின் செயலாளராக உம்மைக் கருதி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து 80-100 சொற்களில் அமையுமாறு அதிபருக்கு ஓர் அறிக்கை எழுதுக.

## தமிழ்மொழியும் இலக்கியமும் III

**(01) பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சுருக்கமான விடை தருக.**

01. பருப்பொருள்,நுண் பொருள் என்பவற்றுக்கு மறை மலையடிகள் கூறும் உதாரணங்கள் எவை.
02. "பூவரைந்த மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்று ஊசலாடுற் றாள் உளம்" இவ்வடியின் எழுவாய் பயனிலை என்பவற்றை இனங்காண்க
03. "இதிலே தெரிஞ்சு போகும் யார் பெரிய புலவருன்னு"இதனை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.
04. சொல்வன்மை உடையானிடம் இருக்க வேண்டிய பண்புகள் மூன்று தருக.
05. உறவு அல்லாதோர், உறவினர் ஆகியோருக்கு வாக்குண்டாம் கூறும் உவமைகள் யாவை?
06. ஒரு பதிவிரதை சரித்திரத்தில் வரும் கசாப்புக்காரன் கூறிய விழுமியக் கருத்துக் கள் இரண்டு தருக.
07. "திருத்தக்க வையமெல்லாம் எமதென்தெழுதுமே மொய்யிலை வேல் மாறன் களிறு"இவ்வடியினைக் கொண்டு கூட்டி எழுதுக.
08. "காப்பீடங்கென்றன்னை" இவ்வடியைச் சந்தி பிரித்து எழுதுக.
09. "கல்வியே அழியாச் செல்வம்" என்றகட்டுரையில் பொருள் தேடுதல் பற்றிய மக்களுடைய அவாவும் நடை முறையும் எவ்வாறிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.
10. ஒரு பதிவிரதை சரித்திரம் என்ற கதையின் கரு யாது?

**(02) பின்வரும் செய்யுள் மற்றும் உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழி நடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் தரப்பட்டவற்றின் சிறப்புகளை விளக்கி எழுதுக.**

அ. கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார்- தெற்ற
அறைகல் அருவி அணி மலை நாட!
நிறைகுடம் நீர் தளும்பல் இல்.

ஆ. கண்ணிமைந்த லாலடிகள் காசினியில் தோய்தலால்.
வண்ண மலர் மாலை வாடுதலால் - எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு.

இ. அறிவான் மிக்க ஆன்றோன் மக்களாய்ப் பிறந்த எல்லார்க்குங் கல்வி இன்றியமையாது வேண்டற்பாலதேயாமென்று கூறியிருக்க அஃது ஆண் மக்களுக்கு தாம் வேண்டுமேயல்லாமற் பெண் மக்களுக்கு வேண்டுவதில்லையென்று உரைப்பார் அறிந்தாராவரோ சொன்மின்கள்! அருமைத் தாய் மார்களே பெண்டபாலார் மக்களிலுந் தாழ்ந்த விலங்குகளாயிருந்தாலன்றோ அவர் கட்குக் கல்வி வேண்டாம் என்னலாம்? இவ்வுலக வாழ்க்iையை நன்றாக நடத்தும் முறையில் ஆன்மக்களைக் காட்டிலும் மிகுந்த பொறுமையும் ஆழ்ந்த நுண்ணறிவும் வேண்டிய அவர்கட்குக் கல்வியெனுந் தூண்டாமணி விளக்கைத் தராமல் அவர்களை அறியாமை என்னும் பேர் இருளிற் போகச் சொல்லுபவர்கள் உண்மை அறிந்த வராவாரோ சொன்மின்கள்.!

ஈ. நமது பெருமை மலை மேலிட்ட தீபம். ஈயாத லோபிகள் எல்லாம் பூண்டற்றுப போகும் படி வசை பாடுவோம். தமிழுக்குத் தீங்கு புரிவோர்கள் இலவம் பஞ்சாகப் பறக்க அறம் பாடுவோம். "இம்"என்றால் எழுநூறும் "அம்" என்றால் ஆயிரமுமாகக் கவிமாரி பொழிவோம். நாம் கல்விச் சமுத்திரம்; கலைமகள் இருப்பிடம்; தமிழ்க் கடலின் மடை திறந்த வெள்ளம் அது மட்டுமா; கற்பனை பிறப்பிடம்; கவிமாரி பொழியும் மேகம்...

**(03)** "நீதிப் பாடல்கள்" என்ற பாடத்தினை அடியொற்றிப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. சொல் வன்மை, பயனில சொல்லாமை என்பன பற்றித் திருக்குறள் கூறும் கருத்துக்கள் யாவை?
2. நான்மணிக்கடிகை கூறும் நான்கு நீதிகளும் எவை?

அல்லது

"கவிச்சக்கரவர்த்தி என்ற பாடத்தினை அடியொற்றிப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

1. ஒட்டக்கூத்தரின் கூற்றுகளில் அவரது கர்வம் வெளிப்படுமாற்றினை விளக்குக?
2. கம்பன் சடையப்ப வள்ளலிடம் கொண்ட நன்றியுணர்வு வெளிப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினை எடுத்துக் காட்டி விளக்குக?

**(04)** "ஒரு பதிவிரதையின் சரித்திரம்"என்றகட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

1. கசாப்புக்காரனைச் சந்திப்பதற்கு முன் யௌவன சந்தியாசின் நிலை எவ்வாறிருந்ததென்று எடுத்துக் காட்டப்படுகிறது.
2. கசாப்புக்காரனைச் சந்தித்த பின் யௌவன சந்நியாசியின் நிலை எவ்வாறிருந்தென்று எடுத்துக் காட்டப்படுகிறது?

அல்லது.

நீர்படித்த "முத்தொள்ளாயிரம்" பாடல்களை அடியொற்றி

1. தலைவனைக் காண்பதில் "தலைவி" கொண்ட ஆர்வம் என்பது பற்றி எழுதுக
2. முத்தொள்ளாயிரம் கூறும் போர் பற்றிய செய்திகளைத் ,தொகுத்துத் தருக

5,6,7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

**(05)** "நளனுக்கே மாலையிட்டாள் நங்கை" என்ற பாடப்பகுதியினை அடியொற்றி "நளவெண்பாவின் அணிச் சிறப்பு" பற்றி விளக்குக

**(06)** மறைமலையடிகள் கல்வியின் சிறப்பை விளக்கப் பல்வேறு இலக்கியங்களிலிருந்தும் ஆதாரங்காட்டுமாற்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

**(07)** "தனிப் பாடல்கள்" என்ற பாடத்தினை அடியொற்றிப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. கம்பர்,திருவெண்ணெய் நல்லூரின் சிறப்பை எவ்விதம் எடுத்துக் காட்டுகிறார்?
2. இடைச்சி தந்த மோர் எத்தகையது என காலமேகப்புலவர் கூறும் ஆற்றினை விளக்குக.

# முறையான சிகிச்சைகளால் காசநோயை விரைவாக குணப்படுத்தலாம்

காசநோய்க்குரிய Myco Bacterium Tubrelosis என்ற பக்ரீயா பொதுவாக விரைவாக தாக்கக்கூடியது. எனினும் Mycobaterium Bovis, Mycobaterium Atricanum ஆகியவற்றினாலும் காச நோய் அரிதாக ஏற்படலாம்.

இது பொதுவாக நுரையீரலையே தாக்கு கின்றது. அரிதாக ஏனைய அங்கங்களை யும் தாக்கலாம். உ+ம்: சிறுநீரகம் , நிணநீர் முடிச்சு, முள்ளந்தண்டு , இதயம்.



இது ஒரு பரம்பரை நோய் அல்ல. முறை யான சிகிச்சை பெறுவதன் மூலம் காச நோயைக் குணப்படுத்தலாம். முறையான சிகிச்சை பெறத்தவறின் நோயாளி இறக்க நேரிடும்.

### நோய் பரவல்

நுரையீரல் காசநோயினால் பீடிக்கப் பட்ட ஒருவர் தும்மும்போதும் இருமும் போதும் பலமாக சிரிக்கும் போதும் வெளி யாகும் சளித்துணிக்கைகளினுள் நோய்க் கிருமிகள் அடங்கியிருக்கும். இன்னொருவ ரின் சுவாசத்துடன் கலக்கும்போது நோய்க் கிருமி தொற்றுகின்றது. நோயாளி ஒருவர் சரியான முறையில் சிகிச்சை பெற்றுக் கொள் ளாதவரை இக் கிருமிகள்இவ்வாறு தொற றும்.

### நோய் ஏற்படல்

உடலினுள் புகுந்த நோய்க் கிருமியானது ஆயுள் முழுக்க அவரது உடம்பில் வாழக் கூடும். ஆனால் காச நோய்க் கிருமிகள் உட்புகுந்த மாத் திரத்திலேயே நோய் ஏற்படு வதில் லை.

ஒரு மனித னின் நோய் எதிர்ப் புத் தன்மை குறை யும்போது காச நோய்ஏற்படவாய்ப் புண்டு.

### நோய் எதிர்ப்பு சக்தி குறையக் கூடிய சந்தர்ப்பங்கள்

1. hn வைரஸ், தொற்றுக்குள்ளா கியிருப் போர் (AIDS நோயாளி) .

2. மதுபானம், புகை, போதைப்பொருள் என்பனவற்றுக்கு அடிமையாகியுள்ளோர்.

3. நீரிழிவு நோய்க்கு ஆளானவர்கள்.

4. Steroiu வகை மருந்துகளை தட்டுப் பாடின்றி உட்கொள்வோர்.

5. போஷாக்கு குறைபாடுடையோர்.

### நுரையீரல் காச நோயின் அறிகுறிகள்

I. மூன்று வாரத்துக்கு மேலான இருமல்
II. இரத்தத்துடன் சளி வெளியேறல்
III. நெஞ்சுவலி
IV. மூச்சுத் திணறல்
V. காய்ச்சல் - இரவு நேர வியர்வை
VI. பசியின்மை
VII. உடல் நிறை குறைவடைதல்
VIII. களைப்பு

### வேறு உடற்பாகத்தில் ஏற்படும் காசநோயின் அறிகுறிகள்

◆ காய்ச்சல்
◆ நிறை குறைவு
◆ நோய் ஏற்பட்ட இடத்தில் வலி ஏற்படல்
◆ மூன்று வாரங்களுக்கு மேலாக இருமல் உள்ளவர் அருகில் உள்ள வைத்தியரிடம் சென்று பரிசோதிப்பது நன்று.

### சரியான மருந்து பாவனை

காசநோயாளி சரியான மருந்துகளை பூரணமான காலப் பகுதிவரை (Dosage) பயன்படுத்தின் நோய் பூரண குணமடையும்.

காசநோயாளி ஒருவர் சரியான மருந்து களை பூரணமான காலப்பகுதி வரை பயன் படுத்தாத போது நோய் குணமாக்க முடியாத கட்டத்தை அடைந்து விடும். இதனை பல் வகை மருந்து எதிர்ப்பு காசநோய் (Multi Drug Resistant Tuberwlosis-MDR T.S) என்பர்.




### மருந்துகளின் பக்க விளைவுகள்

பெரும்பாலான காசநோயாளிகள் பக்க விளைவுகள் எதுவுமற்ற நிலையில் சிகிச்சை யைப் பூரணப் படுத்துகின்றனர்.

ஆயினும் காசநோய் மருந்துகளினால் பக்க விளைவு அரிதாக ஏற்படலாம்.

மருந்து உட்கொள்ளும் காலப் பகுதியில் சூரை மீன், கெல வல்லா போன்ற சிவப்பு நிற சதையுள்ள மீன்களை உணவில் சேர்ப்பதை தவிர்க்க வேண்டும்.

உடல்வலி, வேதனை, செந்நிறத்தில் சிறுநீர் வெளியேறல் , கொப்பளங்கள் (Rosh) இல்லாத, சரும அரிசல் ஆகியன பாதிப்பில்லாத பக்க விளைவுகள் ஆகும்.

கொப்பளங்களுடன் சரும அரிப்பு, வாந்தி அல்லது குமட்டல், கண்கள் மஞ்சள் நிறமாக மாறுதல், பார்வை தெளிவின்மை என்பன பாதிப்பான பக்கவிளைவுகள் ஆகும். மேற் குறித்த குணங்கள் குறி உள்ள காசநோயாளிகள் சிகிச்சை உடனடியாக நிறுத்தி மருந்துகளை தீர்மானித்து வைத்திய ரிடம் செல்ல வேண்டு ம்.

### நோய் பரவாது தடுத்தல்

1. சரியான சிகிச்சை முறையைக் கடைப் பிடித்து நோயிலிருந்து பூரண சுகம் பெற்று கொள்வதினூடாக நோய்க்கிருமிகள் பரவு வதைத் தடுக்கலாம்.

2. இருமும் போதும் தும்மும் போதும் மூக்கு வாய் பகுதியை கைக்குட்டை அல்லது துணித்துண்டு ஒன்றால் மறைத்துக் கொள்ளல்.

டாக்டர் மணிவண்ணன்

3. கண்ட இடங்களில் சளி, எச்சில் துப்புவதை தவிர்த்தல் காச நோயாளியிட மிருந்து தொடர்ந்து சளி வெளிப்புட்டு கொண் டிருந்தால் அதனை சேகரித்து எரித்தல் வேண்டும்.

சுத்தமான காற்றோட்டமுள்ளதும், சூரிய ஒளி படக்கூடியதுமான அறையொன்றில் வசித்தல் அவசியம். (சூரிய ஒளிக்கு காச நோய் கிருமிகள் அழிந்து விடும்).

# தேனும் மருத்துவப் பண்புகளும்

Zoological Name -Apis mellifica
Class - Hymenoptera
Engl -Honey
Sinh - Mecpany.

இது தாவரங்களின் பூவினின்று தேனீக் களால் சேர்க்கப்பட்ட வஸ்து. இப் பூந்தேனை தேனீக்கள் சேகரித்து கூட்டுக்குக் கொண்டு வந்து தன் கூட்டம் அருந்துவதற்காகச் சேர்க் கும். சாதாரணமாகக் காடுகளிலிருந்து வன ஈக்கள் கொண்டுவந்து சேர்ப்பதுதான். இது மலை, மரப்பொந்து, கிளைகளின் உச்சி இலைகளில் கட்டும். தேன் கூண்டுக்களிலி ருந்து எடுக்கப்படும்.

தேனின் குணம் எவ்வகையான தாவரங் களின் மலர்களில் இருந்து தேனைக் கொண்டு வந்ததோ அதைப் பொறுத்தே வாசனையும் அமையும். குறிப்பாக குறிஞ்சி மலர்கள், சம்பங்கி மலர்களிலிருந்து சேக ரிக்கப்படும் தேன் எமது மருத்துவத்தின் படி அதிக மருத்துவ பண்புகளையுடையதாக இருக்கும். ஆனால் குறிஞ்சி மலரானது 12 வருடங்களுக்கு ஒரு முறைதான் மலரும் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக காடு கள், மலைகளிலிருந்து சேகரிக்கப்படும் தேனானது சிறந்த மருத்துவ குணமுடைய தாகும். ஏனெனில் பல்வேறுபட்ட மலர்களிலி ருந்து சேகரிக்கப்படுவதாகும்.

◆ தேன் என்பது, தேனீக்களால் முன்பே சேரிக்கப்பட்ட ஒரு பொருள். ஆகையினால் இதனை உண்டால் அது எளிதில் இரத்தத்து டன் கலந்து சக்தியைத் தருகிறது. மற்றும் உடலின் வெப்பத்தையும் ஒரே சீராக வைத் துக்கொள்ளும்.

◆ தேனில் கலந்துள்ள பல்வேறுபட்ட விற்ற மின்கள், கனிமங்கள் உதாரணம் உயிர்ச் சத்து B,K,C கல்சியம், பொஸ்பரஸ் , இரும் புச்சத்து, பொட்டாசியம், மக்னீசியம் முதலிய சத்துக்களால் உடலில் ஏற்படும் வளர்ச்சி மாற்றங்களும், உள்ளுறுப்புக்களின் வளர்ச்சி மாற்றங்களுக்கும் பெரிதும் உதவு கின்றன.

◆ தேனில் ஒருவித அமிலம் கலந்து இருப் பதால் அது பக்ரீரியாக்களை எளிதில் அழித்து விடுகிறது. இதனால்தான் தேன் சீக்கிரத்தில் கெட்டுப்போவதில்லை. தேனானது 100 வருடங்கள் ஆயுட்காலம் கொண்டது. அதா வது சேகரித்து ஒரு வருடத்திற்குட்பட்ட தேன் மலத்தை இளக்கப் பண்ணும். ஒரு வயதிற்கு மேற்பட்ட தேன் மலத்தை இறுக்கும் . சேரும் மற்றைய பதார்த்தங்களின் குணத் திற்கு ஏற்ப மலத்தை இளக்கலாம் அல்லது இறுக்கலாம்.

◆ தேன் சர்க்கரையை அல்லது சீனியை விட மிகவும் இனிப்பானது. அத்துடன் தேனி லுள்ள ஒருவித இனிய மணம் அதன் சுவையை இன்னும் அதிகமாக்குகிறது. எனவே தேனை- சர்க்கரையை விட கொஞ்ச மாகவே பயன்படுத்திக்கொள்ளலாம்.

◆ குழந்தைகள் தொடர்ந்து தேன் உண்டு வருவதால், அதன் உடல் வளர்ச்சிக்கான கல்சியமும், மக்னீசியமும் சற்று பெருகி வருகிறது. உடலெல்லாம் இளைத்துவரும் குழந்தைகள் பாலுடன் சிறிது தேனைக் கலந்து சாப்பிட்டு வந்தால் நலம்பெறுவார்கள். வயது வந்தவர்கள் கூட, உடல் நலமின்றி படுத்து விட்டால், டாக்டர் பால் உணவைத்தான் சாப்பிடவேண்டும் என்பார்கள். அவர் அருந் தும் பாலுடன் கொஞ்சம் தேனையும் கலந்து கொடுத்து வந்தால் அவர்களே சற்று தெம் பாக இருப்பதாக உணருவார்கள்.

◆ தேன் உண்டு வந்தால் ஆயுளை நீடிக்கச் செய்யும் என்று அநேக நூற்றாண் டுகளுக்கு முன்னமேயே அறிந்து கிரேக்கர் கள் தாராளமாக தேனை பயன்படுத்துவதாக நூல்கள் எடுத்தியம்பியுள்ளன.

◆ நீண்டநாட்கள் தேனைத் தொடர்ந்து உட்கொண்டு வந்தால், அபூர்வமான ஞாபக சத்தி ஏற்படும். இதனால் முன்னோர்கள் மூவாமருந்து என்றும் சாவா மருந்தென்றும் குறிப்பிட்டுள்ள அமிர்தம் தேனாகத்தான் இருக்கமுடியும்.

◆ உடல் அதிக பருமனுடையவர்கள் தேனை எலுமிச்சம்பழச்சாறுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் அதிக பருமன் குறைவடையும். அதிகப்படியான கொழுப்பைக் கரைக்கும்.

◆ குழந்தைகளுக்கு 20 கிராமுக்கு மேலும், பெரியவர்களுக்கு 40 கிராமுக்கு மேலும் தேனை ஒரே தடவையில் எடுக்கக் கூடாது.

◆ குழந்தைகளுக்கு ஏற்படும் இருமலுக்கு தேனை கற்பூரவள்ளிச் சாற்றுடன் கலந்தும், வளர்ந்தவர்களுக்கு ஏற்படும் இருமலுக்கு துளசிச் சாற்றுடன் கலந்தும் கொடுக்க சிறந்த பலனைத் தரும்.

◆ முற்காலத்தில் குறிஞ்சி நிலத்தில் வசித் தவர்கள் அதாவது மலையும், மலைசார்ந்த இடமும் தேனுடன், தினைமாவைக் கலந்து உடலையும், முகத்தையும் வசீகரமாகவும், தோலை மினுமினுப்பாகவும் பேணிவந்துள் ளமை குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

◆ தேனுடன் சிறிது பாதாம் எண்ணெயும் கலந்து முகத்தில் நன்றாகப் பூசி அரை மணி நேரத்திற்குப் பின்பு அழுத்தி துடைத்து விடவும். வாரத்திற்கு இரண்டொரு தடவை செய்து வந்தால் முகம் நல்ல மெருகுபடும்.

◆ படுக்கையில் சிறுநீர் அடிக்கடி கழித் துக்கொள்ளும் 3 வயதான குழந்தை களுக்கு 1 தேக்கரண்டி தேனை வெந்நீரில் கலந்து பருகப்போவதற்கு முன் பு கொடுத் தால் இப் பழக்கத்தை குழந்தை நிறுத்திக் கொள்ளும்.

◆ உடம்பெல்லாம் சோர்வாக இருக்கும் நேரம் கோப்பிக்கு பதிலாக ஒரு கப் வெந் நீரில் 2 தேக்கரண்டி தேனைக் கலந்து சாப் பிட்டால் சோர்வு நீங்கும்.

◆ இரவில் தூக்கம் வராமல் சிலர் கஷ்டப் படுவார்கள். இவர்கள் இரவு படுக்கப்போகும் முன் எலுமிச்சம்பழச் சாற்றில் தேனைக் கலந்து குடித்துவிட்டு படுக்கவேண்டும். தூக்கம் வரும்.

◆ வாய்ப்புண் உடையவர்கள் தேனை அவ்விடங்களில் பூசிவர புண் ஆறும்.

◆ பலாப்பழத்தை உண்ணும்போது சிலருக்கு ஒவ்வாமையை அல்ல அஜீர ணத்தை ஏற்படுத்தும். அப்படியானவர்கள் பலாப்பழச் சுளைகளை தேனில் ஊற வைத்து சாப்பிட்டு வந்தால் எளிதில் ஜீரணமாகும்.

◆ தேனை காயகற்பமாக அதாவது உடலில் ஏற்படும் அழிவுகளை தடுக்க *இஞ்சித் தேனூறல்* ஆகப் பயன்படுத்தலாம். அதா வது இஞ்சிக் கிழங்கை தோல் சீவி, சிறுசிறு கீற்றுக்களாக வெட்டி, ஒரு ஜாம் போத்தலுள் தேனைவிட்டு சிறு சிறு கீற்றுக்களாக வெட்டிய இஞ்சித் துண்டுகள் அதனுள் போட்டு ஒரு மாதம் சென்ற பின்பு ஒவ்வொருநாளும் காலையில் வெறும் வயிற்றில் 1 தேக்கரண்டி எடுத்து சாப்பிட்டு வர உடல் எதிர்ப்புசக்தி அதிகரிப்பதுடன் உடல் திடகாத்திரமாகவும் அமையும்.

இவ்வாறு 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வரலாம். உடலில் கொழுப்புச் சத்து அதிகமுள்ளவர்கள் இஞ்சிக்குப் பதில் வெள் ளுள்ளியைப் பயன்படுத்தலாம்.

◆ நீரிழிவு நோயாளர்களுக்கு சித்த மருத் துவ அடிப்படையில் பல மருத்துவப் பண்பு களுக்கான வேறு மருந்துகளுடன் அனு பானமாகவோ கலந்தோ தேனை பயன் படுத்தி வருகின்றோம்.

இந்தியாவில் வைத் தியர்களே உதவி யாளர்களுடன் சென்று காடுகளில், மலை களில் தேனை சேகரித்து அதனைப் பயன் படுத்துகிறார்கள். இதனை எமது பல நூல் கள் எடுத்துக் கூறியுள்ளன.

### சுத்தமான தேனா என்று அறிய சில வைத்திய அனுபவ குறிப்புக்கள்

◆ தேனில் விழுந்த ஈ சிறிது நேரத்திற்குள் பறந்து சென்றுவிட்டால் நல்ல தேன்.

◆ தண்ணீரில் ஒரு சொட்டுத் தேனை விட்டுப் பார்க்க அது எங்கும் பரவாமல் நேரே இறங்கினால் நல்ல தேன்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் M.D.(S)
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

◆ நாய்க்கு எதிரே ஒரு சொட்டுத் தேனை விட்டால, அது முகர்ந்து பார்த்து போய் விட்டால் நல்ல தேன்.

◆ விளக்குத் திரியை தேனில் தோய்த்து பயன்படுத்தினால், அந்தத் திரி எரிந்தாலும் தேன் துளி ஒரே இடத்தில் தேங்கி நிற்காமல் முத்தைப் போல் உருகத் தொடங்கினாலும் நல்ல தேன் என்று அறிந்துகொள்ளலாம்.

ஏனெனில் தற்போது சர்க்கரைப் பாகில் சாயம் கலந்து தேன் என்று கலப்படம் செய் யப்பட்டு சில விற்பனையாவதால் சுத்தமான தேனை கண்டறிதல் அவசியமாகும்.



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைந்து வட வலய தபால் திணைக்களம் நடாத்திய அரச திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியின் இறுதி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன் போது விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் வெற்றி பெற்றோருக்கு விருந்தினர்கள் கேடயங்கள் வழங்குவதை ஏனைய படங்களிலும் காணலாம்.

# இலங்கை மக்கள் அனைவரும் பயனடையும் வகையில் தேசிய பாதுகாப்பு நிதியம் அவசியம்

## பொருளாதார ஆலோசனை சபை யோசனை

(கொழும்பு)

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய பாதுகாப்பை உறுதி செய்வது முக்கியமாகும். இந் நிலையில் தேசிய பாதுகாப்புக்கான செலவீனங்கள், நாட்டின் அபிவிருத்தியின் முதலீடுகளுக்கு சமனாகும். இதனைக் கருத் தில் கொண்டு இலங்கையர் அனைவரும் பயனடையும் வகையில் தேசிய பாதுகாப்பு நிதியம் ஒன்றை ஏற்படுத்துவது அத்தியாவசியமாகும் என்று பொருளாதார ஆலோசனை சபை யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்தர ராஜபக்ஷ தலைமையில் அமைச் சர்கள் மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான குழுவினருடன் அலரி மாளிகையில் நடைபெற்ற பொருளாதார ஆலோசனை சபை கூட்டத்திலேயே இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் கலாநிதிகள் மற்றும் பொருளாதார நிபுணர்களும் அடங்குகின்றனர்.

ஆலோசனைக் கூட்டம் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முழு உலகமும் பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுததுக்கொண்டிருக்கின்ற நிலையில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தல்களை குறைக்கும் வகையில் தேசிய பொருளாதாரத்தை சக்தி படைத்த ஒன்றாக மாற்றியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக நாடு பூராவும் சிதறிக்கிடக்கின்ற பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்தவர்களை தொழில், தொழில் தேர்ச்சியின் அடிப்படையில் வகைப்படுத்தி ஓர் அமைப்பாக கட்டியெழுப்ப வேண்டும். ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியாக மேம்படுத்துவதும் கைத்தொழில் துறைகளை முன்னேற்றுவதும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசிய மாக அமைந்துள்ளது.

இந்த பொருளாதார ஆலோசனைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக கிழக்கு மாகாணம் தற்போது உள்வாங்கப்பட்டுள்ளது. விரைவில் வடக்கு மாகாணமும் உள்வாங்கப்படும். அதன் மூலமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பாரியளவான மாற்றங்களை மேற்கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

வடக்கை முழுமையாக மீட்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை மன்னாரில் 280 கிலோ மீற்றர் நீளமான புதிய வீதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**ஏ-9 வீதிக்கு சமாந்தரமாக இரண்டு வீதிகளின் நிர்மாணப்பணிகள் நிறைவடையவுள்ளது**

நாட்டில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற சகல அபிவிருத்திகளுக்குமான கௌரவம், பாதுகாப்பு படையினருக்கே உரித்துடையன. மீட்கப்பட்ட கிராமங்களில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்ற அதேவேளை ஏ-9 வீதிக்கு சமாந்தரமாக இரண்டு வீதிகளின் நிர்மாணபணிகள் நிறைவடையும் தறுவாயில் இருக்கின்றன என்றார்.

இதேவேளை சமுர்த்தி போன்ற நிவாரணங்களை வழங்குகின்ற போது ஏற்படுகின்ற முறைகேடுகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று நாட்டின் வரி தொடர்பில் திட்டமொன்றை வகுத்து சகல அமைச்சுக்களில் பொருளாதார கொள்கையை பொருளாதார சபைக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிககைகளை மேற்கொள்ளுமாறும் பொருளாதார ஆலோசனை சபை யோசனை யொன்றையும் முன்வைத்துள்ளது.

அதேபோல் சகல இலங்கையர்களும் பயனடையும் வகையில் தேசிய பாதுகாப்பு நிதியம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான ஆலோசனைகளும் இந்த ஆலோசனைக் குழுவினால் வழங்கப்பட்டுள்ளன. அரச சேவையை விஸ்தரிப்பதுடன் அதற்கு சமாந்தரமான அவர்களின் நலனை மேம்படுத்துவது தொடர்பிலும் கவனத்தை செலுத்துமாறு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த யோசனைகளை பரிசீலனை செய்து தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் கொள்கை ஒன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் பின் நிற்காது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஓ-6)

## விமானப்படையினருக்கு வைத்தியசாலை நிர்மாணம்

(கொழும்பு)

இலங்கை விமானப்படையினருக்கு கிரிமண்டல மாவத்தையில் 196 படுக்கையறைகளுடன் வைத்திசாலையை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. இவ்வைத்தியசாலை அவுஸ்திரேலிய வங்கியின் 33.49 யூரோ மில்லியன் கடன் உதவியுடன் நிர்மாணிக்கப்பட விருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான அனுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்,

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்ட முடிவை தெரிவித்தார். (ஓ)

# இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா பாரிய பொறுப்பை கொண்டுள்ளது

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நிவாரண உதவிகள் மாத்திரம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அதிகார பகிர்வைக் கொண்டு வராது என மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த நிவாரண உதவிகளுக்கு தமிழர்கள் இந்தியாவுக்கு நன்றியை தெரிவிக்கின்றார்கள் எனினும் 13ஆவது அரசியலமைப்பு



சீர்திருத்தத்திற்கு அப்பாற்சென்று தமிழ் முஸ்லிம் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்கு இந்த நிவாரணங்கள் மாத்திரம் போதுமானதல்ல என மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவும் இந்திய உயர்ஸ்தானிகர் ஆலோக் பிரசாத்தும் வன்னிக்கு எவ்வாறு உணவுகளை அனுப்புவது என்பது குறித்து ஆராய்ந்துள்ளார்கள்.

இதனை உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என மனோகணேசன் குறிப்பிட்டுள்ளார். போர் நிறுத்தப்பட வேண் டும் இலங்கைக்கு வழங்கும் ஆயுத உதவிகள் நிறுத்தப்படவேண்டும் என தமிழ்நாடு அரசாங்கம் விடுத்த கோரிக்கைகளுக்கு உரிய பதில் அளிக்காத இந்திய அரசாங்கம் தமிழ் நாட்டு அரசாங்கத்தின் மூன்றாவது கோரிக்கையான உணவு மருந்துப் பொருட்களை அனுப்புவது என்பதற்கு மாத்திரம் இணங்கியுள்ளது.

தாம் இந்தியாவிடம் இருந்து இதனை எதிர்பார்க்கவில்லை எனக்குறிப்பிட்டுள்ள மனோகணேசன் இந்தியா இதனை விட இலங்கை தமிழர்கள் விடயத்தில் பாரிய பொறுப்பை கொண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். நாடு மிக விரைவில் இயல்புக்கு திரும்பாது என குறிப்பிட்டுள்ள அவர் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதாக கூறப்பட்டு அமைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபைக்கே இன்னும் உரிய அதிகாரங்கள் வழங்க்ப்படாமை இதற்கு உதாரணம் என சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# ரயில் திணைக்களத்தை விற்க அரசாங்கம் இரகசிய முயற்சி

## -தொழிற்சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ரயில் திணைக்களத்தை விற்பனை செய்வதற்கு இரகசியமாக முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அகில இலங்கை புகையிரத சேவை ஊழியர்கள் பொது சேவைச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

போக்குவரத்து அமைச்சினூடாகவே ரயில் திணைக்களத்தை விற்பனை செய்வதற்கு இரகசியமாக அரசாங்கம் திரை மறைவில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் சுமதிபால மானவடு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

143 வருட வரலாற்றைக்கொண்ட ரயில் திணைக்களத்தை ஆட்சியிலிருக்கின்ற அரசாங்கம் இரகசியமாக விற்பனை செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது அதற்கு தொழிற்சங்கம் ஒரு போதும் இடமளிக்காது .

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த மாட்டோம் விற்கமாட்டோம் என்று உறுதிகளை வழங்கியே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி பீடம் ஏறியது .

எனினும் உறுதி மொழிகளை இன்று மறந்துவிட்டு அரச நிறுவனங்களை முழுமையாகவே விற்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக அகில இலங்கை புகையிரத சேவை ஊழியர் சங்கம் எதிர்காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது என்று சொன்னார். (ஓ)

# இலங்கை இந்துப் பூசகர்களுக்கு இந்திய விரிவுரையாளர்களினால் பயிற்சி

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் ஆலயங்களில் பணி புரியும் அந்தணர் அல்லாத இந்துக் குருமாருக்கான இரண்டு வார காலவதி விடப் பயிற்சி ஒன்றை வருடந்ததோறும் நடத்தி வருகின் றது. இவ்வாண்டுக்கான பயிற்சி நேற்று ஆரம்பமாகி 18 ஆம் திகதி வரை வெள்ளவத்தை, இராம கிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிநெறியின் போது இந்து ஆலய வழிபாட்டு முறைகள், அடிப்படையான ஆகம விதிகள், பிரார்த்தனை முறைகள் அர்ச்சனை, அபிஷேக முறைகள், அலங்காரங்கள், திருவிளக்குப் பூஜை, தேவாரப் பண்ணிசைப் பாடல்கள், எளிய முறையிலான யோகா சன, பிராணாயாமப் பயிற்சிகள், பஜனை போன்ற விடயங்கள்கற்பிக்கப்படவுள்ளன. திணைக்கள வேண்டுகோளின் பேரில் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த 75இந்துப் பூசகர்கள் இப் பயிற்சிகளைப் பெறவுள்ளனர்.

உரிய முறையில் விண்ணப்பித்து தமது விபரங்களைச் சமர்ப்பித்துள்ள பூசகர்களுக்கு இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்வது தொடர்பான கடிதங்கள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஓ-6)

உன் இதயத்தை ஒருபோதும் – பதவியின் மீது சாய்ந்திருக்க விடாதே.

– மடகாஸ்கார்

வலம்புரி

## நெஞ்சுக்கு நீதி எழுதிய அண்ணலே சடுதியாக சுருதியை மாற்றலாமா?

அடுத்த நாட்டுப் பிரச்சினையில் ஓரளவுதான் தலையிட முடியுமென தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறியுள்ளார்.

உயிரைக் கொடுத்தும் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவோம் எனக் கூறி எங்கள் குருதிச் சுற்றோட்டத்தை வேகமாக்கிய தமிழக முதல்வர் இப்போது சுருதியை சடுதியாக மாற்றி அடுத்த நாட்டுப் பிரச்சினையில் ஓரளவுதான் தலையிட முடியுமெனக் கூறியுள்ளமை அதிர்ச்சியளிக்கின்றது.

ஈழத் தமிழர்கள் படும் துயர் கண்டு தமிழகத்தில் நடந்த ஆதரவலையின் மத்தியில் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி, கருணாநிதியைச் சந்தித்ததன் பின்னர் கலைஞரின் கருத்துக்கள் எவையும் திருப்தி தருவதாக இல்லை.

அடுத்த நாட்டுப் பிரச்சினையில் ஓரளவுதான் தலையிட முடியுமெனக் கருணாநிதி கூறுவாராயின் அதனை ஆயுதம் வழங்குதல், கடலோரக் காவலுக்கு யுத்தக் கப்பல் வழங்குதல் என்ற விடயங்களிலும் கடைப்பிடித்திருக்க வேண்டும் அல்லவா?

ஆக, ஈழத் தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்ற விடயம் வரும்போதுதான் அண்டை நாடு, வெளிநாட்டுத் தலையீடு என்ற வரன்முறைகள் பின்பற்றப்படுகின்றன.

இத்தகைய வரன்முறைகளை ஆயுத உதவிகளை வழங்கும்போதும் பின்பற்றப் பழகிக் கொள்ள வேண்டும். இலங்கையில் இத்துணை தூரம் யுத்தம் மேலோடியிருப்பதற்குக் காரணம் அண்டை நாடான இந்தியா வழங்கிய ஆயுத உதவி என்பதை மறுப்பதற்கில்லை.

விடுதலைப்புலிகளின் விமானங்கள் வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்துவதற்குக் காரணம் இந்தியா வழங்கிய ராடர்களும் அவற்றை இயக்கும் இந்தியத் தொழில்நுட்பவியலாளர்களுமே என்ற ஜே.வி.பியின் குற்றச்சாட்டைத் தமிழக முதல்வர் கருணாநிதி அறியவில்லையா? அல்லது அறியாதவர் போல் நடிக்கின்றாரா?

நெஞ்சுக்கு நீதி எழுதிய கலைஞர் இத்துணை விரைவாகச் சுருதியை மாற்றுவார் என யாருமே எதிர்பார்க்கவில்லை. மத்திய அரசுடன் இணைந்து செயற்படுவது கலைஞருக்கு நல்லதாக இருக்கலாம்.


ஆனால் பதவிக்காக – கட்சிக்காக – சொந்த நலனுக்காகத் தமிழனத்தின் அழிவை அனுமதிப்பதென்பது மன்னிக்க முடியாத குற்றம்.

ஈழத் தமிழரின் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு தலையிட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இல்லையேல் எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வோம் என துணிந்து குரல் கொடுத்து இராஜினாமாக் கடிதமும் கையளித்த பின்னர் கருணாநிதி இவ்வண்ணம் கூறுவது நெஞ்சுக்கு நீதியாகாது.

# அசுரபலம் அழிந்தால் அவனியில் அமைதி வரும்

## இன்று சூரன் போர்

குமரன் முருகன் குடியிருக்கும் கோயில்களில் எல்லாம் இன்று இவ்விழா மிகவும் சிறப்பாகவும் கோலாகலமாகவும் நடைபெறுவது வழமை. ஆணவமே வடிவான சூரபன்மனுக்கும் அருளே வடிவான முருகப்பெருமானுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தைச் சித்தரிக்கும் இவ் விழா உலகில் அகந்தையும் ஆணவமும் மமதையும் அக



நாள் நிலைத்திருக்காது என்பதை உணர்த்தி நிற்கின்றது.

ஆணவ மலம் தான் சூரன்; கன்ம மலம் சிங்கன்; மாயா மலம் தாரகன். இந்த மும் மலங்களும் அடங்கி ஒடுங்கிச் செயலற்றுப் போக ஈற்றில் சேவலும் மயிலுமாக அந்நேரமும் முருகனுடன் இருக்கும் பெரும் பேற்றைப் பெற்றவன் சூரபன்மன். இது ஓர் அரியபெரும் பாக்கியம். தன்னுடைய தவவலிமையினால் தேவர்களையெல்லாம் அடக்கியாண்ட சூரன் கொடுங்கோலாட்சி நடத்தினான். தேவர்களைச் சிறையிலிட்டு வருத்தினான் அதனால் தம்முடைய துன்பங்களைப் போக்கியருளுமாறு தேவர்கள் சிவ னிடம் முறையிட்டனர். அந்த முறைப்பாட்டுக்கிரங்கிய சிவபெரு மான் தமது நெற்றிக் கண் மூலமாக ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்துஅவற்றை ஆறு அழகிய குழந்தைகளாக மாற் றினார்.

அம்பிகையோ ஆறு குழந்தைகளையும் அன்போடு அரவணைக்க ஆறுமுகன் தோன்றினான். இவ்வாறு உருவாகிய ஷண்முகப்பெருமான் இந்த உலகம் உய்ய உதித்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகி
கருணைகூர் முகங்களாலும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"

என்பது கச்சியப்பர் திருவாக்கு.

தேவர்கள் குறை தீர்த்துச் சிறை மீட்ட செல்வனாகக் கந்தக்கடவுள் காட்சியளித்தார். குன்றுதோறாடிவரும் குமரன் சூரனைக்கொன்று தேவரைக் காத்தான் இந்த வரலாறே இன்றைய சூரன் போர். அதர்மத்தை அழித்துத் தர்மத்தை காத்த கார்த்திகேயன் எங்க ளையும் காக்க வேண்டுமென்று ஒற் றுமை யாக எல்லோரும் ஒருமித்துப் பிரார்த் தனை செய்தோமேயானால் நிச்சயம் கைமேல் பலன் கிடைக்கும் "ஒன்றுபட் டால் உண்டு வாழ்வு" என்பது முதுமொழி.

"சூரனை அடக்கித் தேவரைக் காத்த தேவாதிதேவனே! முத்துக்கும ரனே! சேவற்கொடியோனே! மயில்வாகனனே!! எங்களையும் காத்துத் திருவருள் புரிய வேண்டும்" என்று இன்று நாம் ஒற்றுமையுடன் பிரார்த்தனையி லீடுபடு வோம். கருணையே உருவான கந்தன் நிச்சயம் அருள் பாலிப்பான் அவனருளாலே அவன்தாள் வணங்கிப் பேரானந் தப் பெருவாழ்வு பெற்றுய்ய இன்று வழி சமைப்போமாக!

கந்தனைக் கைதொழு கர்ம வினை அகலும்.

சிவநெறி கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

# இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது

## சர்வதேச நாணயநிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுக் கடன்களில் தங்கியிருக்கின்றமை நாணயத்தின் பெறுமதியை அதிகரித்துள்ளமை மற்றும் முறையாக வரவு செலவுத்திட்டத்தைப் பேணாமை இலங்கையை பொருளாதார ரீதியில் பாரிய ஆபத்துக்குக் கொண்டு சென்றிருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாகத் தொடரும் மோதலால் 2008ஆம் ஆண்டு இறுதிவரை பணவீக்கம் 23.9 வீதத்தை எட்டியிருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தனது வருடாந்த அறிக்கையில் இலங்கை பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

பேரினப் பொருளாதாரத்தில் காணப்படும் சமமற்ற தன்மை, உயர் பணவீக்கம், வெளியிலிருந்து வழங்கப்படும் நிதி ரீதியான அழுத்தம் போன்றவற்றால் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும் அச்சம் காணப்படுவதாக பணிப்பாளர்கள் கண்டறிந்துள்ளனர். என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பணவீக்கம் ஒக்டோபர் மாதத்தில் 23.4 வீதமாகக் காணப்பட்டதாக உத்தியோகபூர்வத் தகவல்கள் கூறுகின்றன. உள்நாட்டு நாணயம் தொடர்பாக நிதி ரீதியான கண்காணிப்புக்களை மேற்கொள்ளுமாறும் பொதுச் செலவுகளைக் குறைக்குமாறு நாணய நிதியம் ஏற்கனவே இலங்கைக்கு அறிவுரை வழங்கியிருந்ததாகவும் கூறப்படு கிறது.

உட்கட்டுமானப் பணிகளுக்காக மில்லியன் டொலர் திட்டத்தை முன்வைக்கப்போவதாக ஒக்டோபர் மாதம் இலங்கை அரசாங்கம் விடுத்திருந்த அறிவிப்புக் குறித்து நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்திருந்தது. எனினும் இலங்கை மத்திய வங்கி இரண்டு வருடத்திற்கான 200 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடனைப் பெறுவதற்கு முயற்சித்து வருகிறது. வெளிநாட்டு வர்த்தக வங்கிகளிலிருந்து மேலும் 150 மில்லியன் டொலர்களைப் பெற்றுக்கொள்வது பற்றி இலங்கை மத்திய வங்கி பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.

வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வது சவாலை மேலும் அதிகரித்துள்ளது. இலங்கையின் வெளிநாட்டுக் கணக்குகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அச்சத்தைக் குறைக்கும் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை மத்திய வங்கி கடந்த வாரம் இலங்கை ரூபாவின் பெறுமதியை மிதக்கவிட்டிருந்தது. இதனால் வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதி இலங்கையில் அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஓ-6)

## கல்முனையில் 4 சடலங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

கல்முனைப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்று முன்தினம் நான்கு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

குறுந்தன் கடற்கரைப் பிரதேசத்தில் இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட சடலங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ச-5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## முழுப்பொறுப்பையும் உன் தோள்களில் ஏற்றிக்கொள்



எல்லா பொறுப்பையும் நாமே சுமக்க நேர்வதால் நாம் சிறந்த முறையில், நம்முடைய எல்லா சக்தியையும் திரட்டி இயங்குகிறோம் .நம்மை இவ்வளவு சிறப்பாகச் செயல்பட வைக்க வேறெந்தக் கருத்தாலும் முடியாது. உங்கள் எல்லோருக்கும் நான் ஒரு சவால் விடுகிறேன். ஒரு சிறு குழந்தையை உங்கள் கையில் கொடுத்தால் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்? அந்தக் கண நேரத்திற்கு உங்கள் வாழ்க்கையே மாறிவிடும். நீங்கள் எப்படிப்பட்டவராக இருந்தாலும், அந்த நேரத்திற்கு சுய நலமற்றவர்களாக ஆகியே தீர வேண்டும் .பொறுப்பு திணிக்கப்பட்டால் உங்கள் தீய எண்ணங்கள் எல்லாம் மறைந்து விடும். உங்களுடைய குணம் முழுவதுமே மாறிவிடும். பொறுப்பு முழுவதும் நம் தலையில் விழும் போது நமது சிறந்த தன்மைகளெல்லாம் வெளிப்படத் தொடங்கிவிடும். இருட்டில் தடுமாறிக் கொண்டு நாம் தேடிச் செல்வதற்கு ஒருவர் இல்லாத போது நம்முடைய சுமைகளைச் சுமப்பதற்கு ஒரு சகுனக் கடவுள் இல்லாத போது எல்லா வற்றிற்கும் நாமே பொறுப்பாளியாக இருக்கும். அந்தநிலையில் தான் நாம் மிக உயர்ந்த, மிகச் சிறந்த நிலைக்கு உயரத் தொடங்குவோம். என்னுடைய விதிக்கு நானே காரணமாகிறேன் எனக்கு நன்மையை நானேதான் தேடிக்கொள்ள வேண்டும். எனக்குத் தீமை விளை வித்துக்கொள்பவனும் நானே தான்.

# ரோபோவுக்குப் பின்னரே அரசியல் பிரவேசம் குறித்து அறிவிப்பேன்

## ரஜனிகாந் தெரிவிப்பு

(சென்னை)

சென்னையில் நடிகர் ரஜனிகாந் அவரது ரசிகர்களை சந்தித்து பேசினார். சென்னை இராகவேந்திரா கல்யாண மண்டபத்தில் ரஜனிகாந் தனது ரசிகர்களை சந்தித்து பேசினார்.



அப்போது அவர் அவரது எதிர்கால திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். கூட்டத்தில் ரஜனி கூறியதாவது, அரசியல் கட்சி ஆரம்பிக்க திறமை, உழைப்பு மற்றும் புத்தி சாலித்தனம் மட்டும் இருந்தால் போதாது அதற்கான நேரமும் சூழ் நிலையும் வாய்க்க வேண்டும்.

ரோபோ திரைப்படம் (எந்திரன்) வெளியான பிறகு அரசியலுக்கு வருவது குறித்து அறிவிப்பேன். அரசியலில் ஈடுபட என்னை யாரும் பலவந்தப்படுத்த முடியாது. பலவந்தத்தால் ஏற்படும் எந்த வொரு முடிவும் சரியாக அமையாது.

திரும்பத்திரும்ப வலியுறுத்துகிறேன் என்று நினைக்க வேண்டாம் ஆண்டவன் கட்டளையின் பேரில் அரசியலில் களம் இறங்குவேன். இவ்வாறு இரசிகர்கள் அவரின் அரசியல் பிரவேசம் குறித்துகேட்ட கேள்விக்கு ரஜனி பதிலளித்துள்ளார். ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த்திட்ட பிரச்சினையில் கர்நாடகமக்களிடம்நான் மன்னிப்பு கேட்கவில்லை. வருத்தம் தான் தெரிவித்தேன். இவ்வாறு ரஜனிகாந் தனது ரசிகர்களுடன்நடத்திய சந்திப்பின்போது கூறினார்.

# இலங்கையில் அமைதி திரும்ப வேண்டி

## கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் தொழிலதிபர்

(தூத்துக்குடி)

"இலங்கையில் போர் முடிந்து, அமைதி திரும்பி அனைத்துத்தரப்பு மக்களும் ஒற்றுமையுடன் வாழவேண்டும்" என திருச்செந்தூர் முருகனுக்கு கந்தசஷ்டி விரதம் மேற்கொண்டுள்ள இலங்கை தொழிலதிபர் தெரிவித்தார்.

திருச்செந்தூர் முருகன் கோவில் கந்த சஷ்டியையொட்டி தமிழகம் மட்டுமல்லாது வெளிமாநிலம், வெளிநாட்டு பக்தர்களும் ஆறு நாள் விரதம் இருந்து வருகின்றனர்.

இலங்கை தலைநகர் கொழும்பில் அச்சகம் மற்றும் உணவகம் நடத்தி வருபவர் குமாரசாமி(54). கடந்த ஐந்து ஆண்டுகளாக திருச் செந்தூருக்கு வந்து சஷ்டி விரதம் இருந்து வருகிறார்.

இதுகுறித்து குமாரசாமி கூறுகையில், "முருகன் எனக்கு இஷ்ட தெய்வம். சஷ்டி விரதம் இருப்பதால் தொழிலில் முன்னேற்றம்,



குடும்பத்தில் சந்தோஷம் நிலவுகிறது. மன அமைதி கிடைக்கிறது. இலங்கையில் இராணுவத்திற்கும், புலிகளுக்குமிடையே நடக்கும் போர் முடிந்து அங்கு சிங்கள வர், தமிழர், முஸ்லிம்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் ஒற்றுமையுடன் வழ வேண்டு மென்பதே எனது விருப்பம். அதற்காக முருகனை வேண்டுகிறேன்" என்றார்.

சஷ்டி விரதமிருக்கும் லண்டன் பக்தர்களான ரகுநாதன், அவரது மனைவி சிவானந்த ஜோதி கூறுகையில், "1984 ஆம் ஆண்டிலிருந்து கந்த சஷ்டி விரதம் இருந்து வருகிறோம். கடந்த நான்கு ஆண்டுகளாக திருச் செந்தூர் கோவிலுக்கு வருகிறோம். சஷ்டி விரதம் இருப்பதால் நினைப்பது நடக்கிறது. மனதில் தைரியம் பிறக்கிறது" என்றனர். (ஓ-5)

# இந்திய அரசிற்கு இந்த அவமானம் தேவைதானா?

## தினமணி நாளிதழில் சி. மகேந்திரன் எழுதிய கட்டுரை

போர் நடத்தித்தான் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்க முடியும் என்பதை அறிவித்துச் செயல்படும் இலங்கையின் முக்கிய எதிர்க் கட்சிகளின் ஒன்று தான் ஜே.வி.பி. இன்று இலங்கையில் நடைபெறும் ஆட்சி முறை ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்டது.

ஒற்றையாட்சி மொழி , சிறுபான்மையை நசுக்கக்கூடிய பாசிச இயல்பை சட்டபூர்வமாக பெற்றுள்ளது என்பதும் அனைவரும் அறிந்தது தான். ஒற்றையாட்சிக்கு பதிலாக சுவட்பாட்சி தான் பிரச்சினையைத் தீர்க்கும் என்பதை ஏதாவது ஒரு காலத்தில் இலங்கையில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் உதட்டளவிலாவது பேசியிருக்கின்றன.

ஜே.வி.பியின் கொள்கை இதில் வேறுபட்டு விட்டது. சிங்கள மக்களின் மேலாண்மைக்கு பொருத்தமுடைய ஒற்றையாட்சி தான் இலங்கைக்கு ஏற்புடையது என்று இந்தக்கட்சி கூறுகிறது. தலை மன்னார் , தலை நகர் , கொழும்பு ஆகியவற்றின் விடுதலைப் புலிகளின் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியது பற்றி ஜே.வி.பியின் குருநாகல் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் கேரத் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். தாக்குதலுக்குள்ளான இடங்களில் பாதுகாப்பிற்கென்று இந்திய இராணுவத்தால் அமைத்து தரப்பட்டிருக்கும் ராடர் கருவிகள் மூலம் சரியாக கண்காணித்து தகவல் அளிப்பதில் ஏற்பட்ட குறைபாடுதான். புலிகளின் விமானங்கள் தப்பிச்செல்வதற்கு காரணமாக அமைந்து விட்டது என்று கூறியுள்ளார்.

## ஜே.வி.பி . அவமானப்படுத்திய நிலையில்

## இந்திய அரசு இராணுவத்தை திரும்பப் பெறவேண்டும்

இதில் எழுப்பியிருக்கும் கேள்வி இந்திய இராணுவத்தின் நம்பகத்தன்மையை பற்றியது. எந்த நாட்டிற்கு காவலாளியாகச் சென்றாலும் அந்த நாட்டிற்கு நம்பிக்கை மிக்க காவலாளியாக இருக்கவேண்டாமா என்ற காவல் நேர்மையை இந்த கேள்வி எழுப்பிப் பார்க்கிறது. இந்த கேள்வியில் இலங்கையில் வாழும் சிங்கள மக்கள் நியாயம் இருப்பதைப் போல உணர்ந்தாலும் இந்தியர்களாகவும் தமிழர்களாகவும் வாழ்ந்துவரும் நமக்கு ஒருவிதமான அவமான உணர்ச்சியை இது தோற்றிவித்து விட்டது.

ஆயுத உதவியும் செய்து இத்தகைய கேவலமான அவப்பெயரையும் நாம் சூட்டிக் கொள்ளவேண்டுமா? என்ற எண்ணம் ஏற்பட்டுவிடுகிறது.

இந்திய நாடாளுமன்றத்திற்கு தெரியாமலும் இந்திய மக்களுக்கு தெரியாமலும் இந்தியா , இலங்கை இராணுவத்திற்கு செய்த உதவி இது. இராணுவம் ஒரு நாட்டின் கௌரவமாக பேசப்படுகிறது. அதுவும் இந்திய இராணுவம் குறித்த பல பெருமைகள் நாடாளுமன்றத் தால் பல முறை புகழப்பட்டுள்ளது. அந்த இராணுவத்தை தொழில்நுட்ப உதவி என்ற பெயரில் அனுப்பியதில் ஏற்பட்ட அவமானத்திற்கு யார் பொறுப்பேற்பது?

கடந்த மூன்று மாதங்களாக இலங்கைக்கு இந்திய அரசாங்கம் இராணுவ உதவி செய்கிறதா என்ற கேள்வி இந்திய அரசாங்கத்திடம் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகின்றது. ஒரு நீண்ட மௌனத்தின் மூலம் இந்த கேள்வியை மரணக்குழியில் புதைத்து விடவே இந்திய அரசு விரும்பியது. அப் படியோ வலுவடைந்த தமிழகத்தின் போராட்டங்கள் இந்திய அரசின் வாயை திறக்க வைத்து விட்டது.மெல்ல வாய் திறந்து இந்திய அரசாங்கம் கூறியது. இந்தியாவின் இராணுவ பாதுகாப்பு காரியங்களுக்காகவே இலங்கைக்கு உதவி செய்யும் அவசியம் எழுந்தது என்று நமது நாட்டின் பாதுகாப்பில் அரசாங்கத்தின் அக்கறை பற்றி யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

இலங்கையில் நடப்பது ஓர் உள்நாட்டுப்போர் எந்தப்பகை நாடும் இலங்கையுடன் போர் தொடுக்கவில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான வரலாற்று ரீதியான இன ஒடுக்கு முறையின் இன்றைய வடிவம் இந்த உள்நாட்டுப்போர் . பயங்கரவாதத்தின் பெயரால் இந்தப் போரை நடத்துதல் ஆட்சியாளர்களுக்கு வசதியாக அமைந்துவிட்டது.

யுத்தத்தின் முழுச்சுமையையும் சுமந்து திரிபவர்கள் யார்? என்பதை மட்டும் நாம் யோசித்துப்பார்க்கவேண்டும். இன்று எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக நிற்கும் இலங்கையின் பூர்வ குடிகளான தமிழ் மக்கள் தான். என்பதை யாரும் மறுக்க மாட்டார் கள் .போர் விமானம் பொதுமக்களின் குடியிருப்புகளை வெறி கொண்டு தாக்கி தரை மட்டமாக்குகிறது. இராட்சத கழுகுகளைப்போல விமானங்கள் அவர்களை துரத்தி அடித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் ஓடி ஓடி களைத்துவிட்டார்கள்.மூன்று மாதங்களில் குறைந்தது 10 இடங்களில் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். பட்டினியோடும் பயத்தோடும் வாழும் மக்களுக்கு பதுங்கு குழிகள் தான் புகழிடம் .ஆனால் அங்கும் பாம்புகளும் நாய்களும் பதுங்கி இருந்து இவர்களை வெறி கொண்டு கடிக்கத்தொடங்கி விடுகிறது. பாம்புக்கடியால் மட்டும் 200ற்கும் அதிகமானவர்கள் இறந்து போனதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றனர்.

மலேரியா நுளம்புக்கடியால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் அகதி முகாம்களில் மட்டும் 5 இலட்சம் தமிழ் மக்கள் இருக்கிறார்கள் இந்தப் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் அணுகுவதைவிடுத்து இந்தியா தங்கள் பாதுகாப்பு என்று கூறி இலங்கைக்கு இராணுவ உதவிகள் செய்வது சரிதானா? என்ற கேள்வி எழுகிறது.

இந்தியாவின் தெற்கு எல்லையில் இராணுவ ரீதியாக ஒரு முக்கியத்துவமுடைய தீவு இலங்கை என்பது அனைவருக்கும் தெரியும். இலங்கையின் இராணுவ பாதுகாப்பும் இந்தியாவின் இராணுவ பாதுகாப்பும் ஒன்றுக்கொன்று ஆழமான தொடர்பை கொண்டுள்ளது என்பதும் உண்மைதான் மக்கள் தொகையில் இலங்கை சிறிய நாடு என்றபோதிலும் இந்திய அரசாங்கத்தை பலமுறை ஏமாற்றி இருக்கிறது. ஏமாற்றுவதன் மூலம் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று இன்றும் அது நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்திய -சீனப் போர் , இந்திய -பாகிஸ்தான் போர் என்ற இரண்டு போர்களை இந்தியா சந்தித்தது. அப்பொழுதெல்லாம் இலங்கையின் கொழும்பு நகரம் தான் போர் விமானங்களுக்கான பெற்றோல் நிரப்பிக்கொள்ளும் வசதியைச் செய்துகொடுத்தது.

கச்சதீவும் பெருந்தன்மையோடு இலங்கை அரசுக்கு இந்தியாவால் வழங்கப்பட்டது ஆனால் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட இந்திய மீனவர்களின் உரிமையை முற்றாக மறுத்ததுடன் கச்சதீவை சுற்றிய பகுதிகளில் நூற்றுக்கணக்கில் மீனவர்கள் கொலை செய்யப்படுவதற்கும் இலங்கை அரசு காரணமாக அமைந்து விட்டது. திம்புபேச்சு வார்த்தைக்குப் பின்னர் அமைந்த ஜெயவர்த்தன ராஜீவ் ஒப்பந்தமும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதி ஒரே மாநிலமாக அமைய வேண்டும் என்ற ஒப்பந் தத்தின் முக்கியப் பகுதியை சூழ்ச்சியால் மாற்றி விட்டது. இன்று நடை பெறும் உள் நாட்டுப் போரிலும் தூரத்து நாடுகளிடம் ஆயுதங் களை வாங்குவதன் மூலமும் இந்தியாவை மிரட்டி பார்க்கிறது. இதை இந்திய அரசு சரியாகப் புரிந்துகொள்ளல் அவசியம்.

கடந்த ஒக்டோபர் 2ஆம் திகதிக்குப் பின்னர் அசைவற்று உறைந்து கிடந்த தமிழகம் உறக்கம் கலைந்து இலங்கைத் தமிழ் மக்களுக்கு சகோதர ஆதரவு தெரிவிக்க எழுந்து நின்றது. இலங்கைத் தமிழ் மக்களுக்காகத் தாய்த் தமிழகத்தின் இந்த எழுச்சி இலங்கை அரசாங்கத்திற்கும் அதற்கு இந்தியாவின் சார்பில் உடனிருந்து உதவி புரிந்து வந்த அதிகாரவர்க்கத்திற்கும் பெரும் அச்சத்தை உருவாக்கியிருக்கிறது. கூட்டணி சகாப்தத்தில் நுழைந்து விட்ட நமது அரசியலில் இது சில நிர்ப்பந்தங்களை உருவாக்கியிருக்கிறது.

இலங்கையின்சிறப்புத் தூதர் பசில் ராஜபக்ஷ வருகை இந்த அச்சத்தின் வெளிப் பாடு தான். ஆனால்இது இலங்கை அரசு நடத்தும் போலி நாடகம் என்பதைப் புரிந்துகொள்ள யாருக்கும்சிரமம் இல்லாமல் போய்விட்டது. பொது மக்களில் ஒருவரைக் கூட கொல்லாத போர் ஒன்றை இலங்கையின் வடக்குப் பகுதியில் நடத்தப் போவதாக இலங்கை அர சின் சார்பில் வாக்குறுதிஅளித்தார். எந்தப் போரிலும் முதலில் கொல்லப்படுவது சாதாரணமானகுடி மக்கள்தான் அதிலும் தமிழ் மக்களுக்கு எதிரானது என்று கூறப்படும் போரில் எவ்வாறு பொது மக்களில் தமிழரில் ஒருவரைக் கூட கொல்லாத யுத்தத்தை நடத்தப் போகிறது.என்பது நமக்குப் புரியவில்லை.


கொல்லாமையைஅடிப்படை ஆதாரமாகக் கொண்ட புத்த மதத்தைப் பின்பற்றும் இலங்கை இதற்கான தனி ஏற்பாட்டை வைத்திருக்கிறதா? என்பதும் புரியவில்லை. இந்த வாக்குறுதி எவ்வாறு பொய்மை நிறைந்தது. என்பதை கிளிநொச்சி மருத்துவ மனையின் எறிகணை தாக்குதல்உறுதி செய்தது. மருத்துவ மனையின் இடிந்து போன கட்டடங்கள் புகைப்படங்களோடு ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் பசில் ராஜபக்ஷவின் டில்லி வருகையை ஒட்டிய காலத்திலேயே நிகழ்ந்தது. இதன் பின்னர் 1300 குழந்தைகள் கல்வி பயிலும் பாடசாலை ஒன்று பரந்தன் என்னும் இடத்தில் குண்டு மழைக்கு இலக்கானது. மருத்துவமனையிலும் பாடசாலைகளிலும் குண்டு போடுகிறவர்களால் எவ்வாறு பொது மக்களைக் கொல்லாத யுத்தத்தைப் பற்றி பேச முடிகிறது. என்பது வியப்பாகத்தான் இருக்கிறது.

இலங்கைஅரசியலிலும் நெருக் கடிகள் கூடுதலாகிக் கொண்டே செல்கிறது. தேர்தல் முடிந்த பின்னர் ராஜபக்ஷவின்கட்சி பெரும்பான்மையை பெறாத கட்சியாகவே ஆட்சி அமைத்தது.வேறு கட்சிகளிலிருந்து 45 நாடாளுமன்ற உறுப்பினர்களை தங்கள் கட்சிக்கு ஆதரவாக எப்படியோ மாற்றிக் கொண்டது. 225 பேர்கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் இந்தக் கட்சியின் இன் றைய ஆதரவு உறுப்பினர்கள் 120பேர் இதில்112 பேர் அமைச்சர்கள் இன வெறியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தான் ராஜபக்ஷவால் இப்பொழுது ஆட்சி நடத்தப்படுகிறது யார் கூடுதலாகஇன வெறி அரசியல் பேசு கிறார்களோ அவர்கள் தான்மக்களிடம் செல்வாக்கைப் பெற முடியும் என்ற இன வெறி சூழல் இலங்கையில் உருவாகியிருக்கிறது. இந்தத் தொடர்ச்சியின் விளைவு தான் ஜே. வி.பி இந்தியா தனது பாதுகாப்புப் பணியைச் சரிவரச் செய்யலில்லை. என்ற குற்றச்சாட்டை எழுப்பியுள்ளது. இதற்கு இந்திய அரசு என்னபதில் சொல்லப் போகிறது. என்று கேள்வியும் முக்கியமானதாகும்.

இலங்கையில்தமிழ்மக்களைக் கொல்லப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களை இந்தியா வழங்கக்கூடாது என்பது முழு தமிழகத்தின் கோரிக்கைஇவ்வாறு ஒரு கோரிக்கை யை முன் வைப்பதற்கு தமிழ்மக்களுக்கு உரிமை இருக்கிறது இந்தப் பின்னணியில் தான் இந்திய இராணுவத்தின்மீது இலங்கையின் ஜே. வி. பி சந்தேகத்தை எழுப்பி பகிரங்கமாக அவமானப்படுத்தியுள்ளது. இன்றைய நிலையில் இந்த அரசு இலங்கையில் இருக்கும் அனைத்து இராணுவத்தினரையும் உடனடியாகத் திருப்பிப் பெற்றுகொள்ளல் அவசியம். இந்திய தனது கௌரவத்தை காப்பாற்றிக்கொள்ள இதைத் தவிர வேறு வழி எதுவுமில்லை. இதைச் செய்யா விட்டால் தொடர்ந்து அவமானப்படுவதற்கு இந்தியா தன்னைத் தயார்ப் படுத்திக்கொள்ள வேண்டும்.

# போர்முலா -1 கார் பந்தயத்தில் இங்கிலாந்தின் ஹேமில்டன் சம்பியன்



(சாபாவ்லோ)

கார்ப் பந்தயங்களில் மிகவும் பிரபலமானது போர்முலா 1 போட்டியாகும். இந்த ஆண்டுக்கான போர்முலா 1 கார்ப் பந்தயம் 18 சுற்றுக்களைக் கொண்டது.

இந்தப் போட்டியின் 18-வது மற்றும் இறுதிச் சுற்றுப் பந்தயம் பிரேசில் நாட்டிலுள்ள சாபாவ்லோ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போர்முலா 1 போட்டியில் இங்கிலாந்து வீரர் ஹேமில்டன் பட்டம் பெறுவரா? பிரேசில் வீரர் பெலிப் மாசா பட்டம் பெறுவரா? என்ற பரபரப்பு இருந்தது.

இருவருக்கும் இடையே 7 புள்ளிகள் வித்தியாசம் இருந்தது. இந்தப் போட்டியில் பிரேசில் வீரர் பெலிப் மாசா ஒரு மணி 34 நிமிடம் 11.43 விநாடிகளில் கடந்து வெற்றி பெற்றார்.

உள்ளூர் ரசிகர்களின் ஆதரவால் வெற்றி பெற முடிந்த அவரால் சம்பியன் பட்டம் பெற முடியாமல் போனது. ஹேமில்டன் 5 -வது இடத்தைப் பிடித்ததால் அவர் ஒரு புள்ளியில் வாய்ப்பையிழந்தார்.

பெர்னாண்டோ அலோன்சா 2-வது இடத்தையும் சிமி ரெய்க்கோனன் 3 -வது இடத்தையும் செபாஸ் டியன் 4-வது இடத்தையும் ஹேமில்டன் 5-வது இடத்தையும் பிடித்தனர்.

18 சுற்றுகள் முடிபில் ஹேமில்டன் 98 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்து சம்பியன் பட்டம் பெற்றார். 23 வயதான ஹேமில்டன் இளம் வயதில் போர்முலா 1 பந்தயத்தில் சம்பியன் பட்டம் பெற்றவர் என்ற புதிய வரலாற்றை அவர் படைத்தார்.

இதற்கு முன்பு 2005 ஆம் ஆண்டு ஸ்பெயின் வீரர் அலோன்சா 24 வயதில் போர்முலா 1 போட்டியில் சம்பியன் பட்டம் பெற்றிருந்தார்.

ஹேமில்டன் அவுஸ்திரேலியா, மொனாக்கே, இங்கிலாந்து, ஜேர்மனி, சீனா ஆகிய இடங்களில் நடந்த போட்டியில் வெற்றி பெற்றார்.

பெலிப் மாசா 97 புள்ளிகள் பெற்று 2-வது இடத்தைப் பிடித்தார். அவர் பக்ரைன், துருக்கி, பிரான்ஸ், ஐரோப்பிய கிராண்ட் பீரி, பெல்ஜியம், பிரேசில் ஆகிய ஆறு போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தார்.

சிமிரெய்க்கோனன் (பின்லாந்து) 75 புள்ளிகள் பெற்று 3-வது இடத்தையும் ரொபர்ட் குபிகா (போலந்து) 4-வது இடத்தையும் முன்னாள் சம்பியன் அலோன்சா (ஸ்பெயின்) 5-வது இடத்தையும் பிடித்தனர்.

அணிகள் பிரிவில் பெராரி 172 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்தது. மெக்லரன் (151 புள்ளிகள்) 2-வது இடத்தையும் பி.எம். டபிள்யூ. சவ்பேர் (135 புள்ளிகள்) 3-வது இடத்தையும் பிடித்தன.

# அனில் கும்ளேயுக்கு ரணதுங்க பாராட்டு

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ள அனில் கும்பிளேக்கு, இலங்கை கிரிகெட் சபையின் தலைவர் அர்ஜுன ரணதுங்கா பாராட்டு தெரிவித்துள்ளார்.

கும்பிளே எதிர்கால சந்ததியினருக்கு ஒரு சிறந்த முன்மாதிரி என அவர் தெரிவித்துள்ளார்.

கும்பிளே இங்கிலாந்திலோ, அவுஸ்திரேலியாவிலோ பிறந்திருப்பாராயின் உலக அரங்கில் அவருக்கு மிக சிறந்த இடம் கிடைத்திருக்கும்.

கும்பிளே தொடர்ந்து கிரிக்கெட்டில் தன் ஈடுபாட்டை காட்ட வேண்டும், இந்திய கிரிக்கெட்டின் தரத்தை மேம்படுத்த பாடுபட வேண்டும் என ரணதுங்கா தனது விருப்பத்தை கும்ளேவுக்கு தெரிவித்துள்ளார். (5)

# டெண்டுல்கருக்கு மிரட்டல் கூடுதல் பாதுகாப்பு

(நாக்பூர்)


இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் சச்சின் டெண்டுல்கர்.

பாகிஸ்தான் ஆதரவு பெற்ற ஜெய்ஷ்- இ- முகமது தீவிரவாத இயக்கம் அவருக்கு மிரட்டல் விடுவித்துள்ளது.

இதை தொடர்ந்து டெண்டுல்கருக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக நாக்பூர் பொலிஸார் தெரிவித்தனர். இந்தியா- அவுஸ்திரேலியா மோதும் 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாக்பூரில் நாளை மறுதினம் ஆரம்பமாகிறது. (5)

# கும்ளேயின் ஓய்வு கேட்டு சக வீரர்கள் அழுதனர்

## ஸ்ரீகாந்த் தெரிவிப்பு



கிரிக்கெட் அரங்கில் கும்ளேயின் போராடும் குணத்தை முன்னாள் வீரர்கள் வெகுவாகப் புகழ்ந்துள்ளனர்.

இவரது ஓய்வைக் கேட்டு சக இந்திய வீரர்கள் அழுததாக ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார். **ஸ்ரீகாந்த் (இந்தியத் தேர்வுக் குழுத் தலைவர்)** மூன்றாவது டெஸ்டின் இறுதி நாள் ஆட்டத் தேநீர் இடைவேளையின்போது ஓய்வு பெறும் முடிபை என்னிடம் சொன்னார். அப்போது இந்திய வீரர்கள் உணர்ச்சிவசப்பட்டு அழுதனர்.

அவர்களது பெயரைச் சொலல விரும்பவில்லை. கும்ளே ஒரு சகாப்தம். இளம் வீரர்களுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியானவராகத் திகழ்கின்றார்.

**கபில்தேவ் (முன்னாள் இந்திய அணித் தலைவர்)** இந்தியக் கிரிக்கெட்டின் மிகச் சிறந்த தூதராக கும்ளே திகழ்கின்றார். சர்ச்சைகளில் சிக்காதவர். கிரிக்கெட் களத்தில் விட்டுக் கொடுக்காமல் போராடும் இவர், உண்மையான ஜென்டில்மென் வீரர். இவரை ஓய்வு பெறும்படி நிர்ப்பந்தம் அளிக்கப்படவில்லை.

**ரவி சாஸ்திரி (முன்னாள் இந்திய அணித் தலைவர்)** இந்திய அணிக்கு சோகமான நாள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனாலும் சரியான் நேரத்தில் ஓய்வுபெறும் முடிபை எடுத்துள்ளார் கும்ளே. இவரது ஓய்வு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

**கவாஸ்கர் (முன்னாள் இந்திய அணித் தலைவர்)** கும்ளே மனதளவில் சோர்ந்து விட்டார். அதனால்தான் ஓய்வு பெறும் முடிபை எடுத்துள்ளார். இவரது இடத்தை அமித் மிஸ்ரா நிரப்புவார்.

**சச்சின் (இந்திய வீரர்)** கும்ளேயுடன் சேர்ந்து விளையாடியது மிகப் பெரிய கௌரவம். அடுத்த தலைமுறை வீரர்களுக்கு ஊக்க சக்தியாகத் திகழ்கின்றார். மேற்கிந்தியத் தீவுகளில் நடந்த போட்டியில் தாடையில் ஏற்பட்ட காயத்தைப் பொருட்படுத்தாது பண்டேச் அணிந்து பந்து வீசியதை என்னால் எப்போதும் மறக்க முடியாது.

**கங்குலி (இந்திய வீரர்)** கும்ளே இடத்தை எளிதில் நிரப்ப முடியாது. சுண்டுவிரல் காயத்துக்கு 11 தையல் போட்ட நிலையில் டில்லி டெஸ்டில் பந்து வீசியது, ஓவல் டெஸ்டில் சதம் அடித்தது போன்றவற்றை மறக்க முடியாது.

# ஓய்வு பெற்றது எனது சொந்த முடிபு

## மனம் திறக்கிறார் கும்ளே

(பெங்களூர்)

ஓய்வு பெறும்படி என்னை யாரும் நிர்ப்பந்திக்கவில்லை. மூத்த வீரர்கள் வரிசையாக வெளியேற வேண்டும் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எந்தக் கட்டுப்பாடும் விதிக்கவில்லை என்கிறார் கும்ளே.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்திய இந்திய வீரர் என்ற பெருமை பெற்றவர் அனில் கும்ளே. இவர் டில்லி டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற்றார்.

சமீப காலமாக போர்ம் இன்றித் தவித்து வந்த இவர், இலங்கைத் தொடரில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து ஓய்வு பெற வேண்டும் என்ற விமர்சனத்திற்கு ஆளானார். இந்தியக் கிரிக்கெட் சபையும் (பி.சி.சி.ஐ.) மூத்த வீரர்கள் தங்களது ஓய்வை முன்னதாக் அறிவிக்க வேண்டும்.

அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடருக்குப் பின் இது தொடர்பான இறுதி முடிபு எடுக்கப்படும் எனத் தெரிவித்தது.

### அடுத்து ராவிட்?

பி.சி.சி.ஐ. மூத்த வீரர்களுக்கென்று ஓய்வுத் திட்டம் ஒன்றை வகுத்திருப்பதாகவும் அதன்படி ஒவ்வொரு வீரராக ஓய்வு பெற்று வருவதாகவும் தெரிகின்றது.

இந் நிலையில் முதலாவதாகக் கங்குலி, அவுஸ்திரேலிய தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். கும்ளே இவரை முந்திக் கொண்டு மூன்றாவது டெஸ்ட்டுடன் விடை பெற்றார்.


அடுத்து நடக்கவிருக்கும் இங்கிலாந்து டெஸ்ட் தொடருடன் ராவிட், லக்ஷ்மனும் ஓய்வை அறிவிப்பார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளன.

### சொந்த முடிபு

இந் நிலையில் கும்ளே இதை மறுத்துள்ளார். ஓய்வு முடிபைத் தானே எடுத்துள்ளதாகவும் தன்னை யாரும் நிர்ப்பந்திக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில்,

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை யாரையும் ஓய்வு பெறும்படி நிர்ப்பந்திக்கவில்லை. இது தவறான செய்தி. எப்பொழுது ஓய்வு பெற வேண்டும் என்பது அனைத்து வீரர்களுக்கும் தெரியும்.

கங்குலி அவரது முடிபை எடுத்தார். நானும் எனது முடிபை எடுத்தேன். எனக்கு எந்த நெருக்கடியும் அளிக்கப்படவில்லை. விமர்சனங்கள் வரவேற்கக் கூடியது என்றார்.



யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொன் அணிகள் உதைபந்தாட்டப் போட்டியில் ஆரம்ப நிகழ்வில் கல்லூரிகளின் கொடிகள் ஏற்றப்படுவதை முதலாவது படத்திலும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி முதல்வர் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் வெற்றி பெற்ற அணியின் தலைவரிடம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் வெற்றிக் கேடயத்தை வழங்குவதையும் மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள் :- கோபி)

# கல்முனையில் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

ஐந்து இளைஞர்கள் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து நேற்று கல்முனையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று முன்தினமிரவு இவர்களில் நால்வர் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளான நிலையில் கல்முனைக் கடற்கரையிலும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மற்றும் ஒருவர் நேற்று வைத்தியசாலையிலும் மரணமாயினர்.

இது உட்கட்சிப் பூசலின் ஒரு பகுதியே என பரவலாக பேசப்படுகிறது. எனினும் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே இந்த கொலைகளை நடத்தியதாக இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது. (ச)

# தமிழக ஆசிரியர் கூட்டணி 1.25 கோடி ரூபா நிதி உதவி

(சென்னை)

இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்காக, தமிழக ஆசிரியர் கூட்டணி, ஒரு கோடியே 25 லட்சம் ரூபாயை வழங்குவதாக அறிவித்துள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் வின்சென்ட் பால்ராஜ் கூறியிருப்பதாவது, தமிழக ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், தங்களின் ஒரு நாள் சம்பளமாக இந்த நிதி உதவியை வழங்குகின்றனர்.

இந்த தொகையை, இம்மாதச்சம்பளத்தில் பிடித்தம் செய்து கொள்வதற்கான ஒப்புதல் கடிதத்தை, தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வித்துறைச் செயலரிடமும் வழங்கியுள்ளோம் என்றார். (ச-5)

# முதல்வர் கருணாநிதியின் அறிக்கை மத்திய அரசை நியாயப்படுத்துகிறது

## பழ.நெடுமாறன் கண்டனம்

(சென்னை)

இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தி முதல்வர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கை அதிர்ச்சியளிக்கிறது என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று திங்கட்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிபுகள் குறித்து இந்திய அரசின் நடவடிக்கைகள் ஏமாற்றமளிப்பதாக பல்வேறு கட்சித் தலைவர்களும் கூறியுள்ள நிலையில் மத்திய அரசின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தி முதல்வர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கை அதிர்ச்சியளிக்கிறது.

இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவதில் மத்திய அரசின் நிலையையும் அதிகார எல்லைகளையும் உணரவேண்டும்.

இன்னொரு நாட்டின் பிரச்சினையில் பக்கத்து நாடு ஓரளவுதான்தலையிடமுடியும் என கூறும் முதல்வர் தீர்மானம் போடுவதற்கு முன் இதைப்பற்றி யோசிக்கவில்லையா? இலங்கை அரசுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தபோது அது உள்நாட்டுப் பிரச்சினையென இந்திய அரசுக்குத் தெரியவில்லையா?

இந்திய அரசு அளித்த ஆயுதங்களைக் கொண்டு தமிழர்கள் கொன்று குவிக்கப்படும் போது போரை நிறுத்து என்று கூறுவது இந்தியாவின் அதிகார எல்லையை மீறும் செயலா?

அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி தீர்மானம் போட்ட முதல்வரே அதை மதிக்காமல் பின்வாங்கும்போது அக்கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகள் இணைந்து முடிபெடுக்க வேண்டிய வேளை வந்துவிட்டது.

இந்திய அரசின் நிலைப்பாட்டை தமிழக மக்கள் ஏற்காததன் அறிகுறியே நாடெங்கும் நடைபெற்றுவரும் மக்கள் போராட்டங்கள் ஆகும்.

மக்களின் போராட்டத்தை தொடர கட்சிகள் ஒன்றுகூடி தயாராவோம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போயிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த நாகராசா ஜெயமோகன் (வயது 32) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் கடந்த சனிக்கிழமை காணாமல் போயிருந்ததாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்ததாகவும். நேற்று துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டு சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# நேர்முகத் தேர்வு எங்கே? அதிபர்கள் குழப்பம்

(கொழும்பு)

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபர்களுக்கான சேவைதகுதி காண் தெரிவுகள் தற்பொழுது கொழும்பில் இடம் பெற்று வருகின்றன.

மொத்தமாக ஆயிரத்து 800பேர் இந்தத் தெரிவில் உள்வாங்கப்படுகின்றார்கள். இதில் நானூறு பேர் தமிழ் அதிபர்களாவர். இந்த நிலையில் இதில் 80பேர் வரை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களுக்கு கொழும்புக்கு சமுகமளிக்க முடியாத நிலையில் அவர்களை சேர்ந்த இடங்களிலேயே பரீட்சிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கல்வியமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்திருக்கிறார்.

எனினும் நிமல் பண்டாரவின் கருத்துக் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என கூறியுள்ள கல்வியமைச்சின் மேலதிக செயலாளரும் நேர்முகத் தேர்வுக்குழுவைச் சேர்ந்தவருமான முகமட் தம்பி, நேர்முகத் தேர்வை கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார். (ச-3)

# சின்னத்திரை நடிகர்கள் 9ஆம் திகதி உண்ணாவிரதம்

(உத்திரமேரூர்)

இலங்கை தமிழர்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த வலியுறுத்தி சின்னத்திரை நடிகர் சங்கம் சார்பில் வரும் 9ஆம் திக்தி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற உள்ளது.

சின்னத்திரை நடிகர் சங்க செயலாளர் சிவன் சீனிவாசன் உத்திரமேரூரில் கூறியதாவது, இலங்கை அரசு தமிழர்களை கொன்று குவித்து வருகின்றது.

இதைக் கண்டித்தும், மத்திய அரசு உடனே தலையிட்டு தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதைதடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் திரை உலகம் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

சின்னத்திரை நடிகர் சங்கம் சார்பில் வரும் 9ஆம் திகதி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த முடிபு செய்துள்ளோம்.

உண்ணாவிரதப் போராட்டத்திற்கு சின்னத்திரை நடிகர் சங்கத் தலைவர் வசந்த் தலைமை தாங்குகிறார்.

உண்ணாவிரதத்தில் சின்னத்திரை நடிகர், நடிகைகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் எனக் கடிதம், தொலைபேசி மற்றும் நேரில் அழைப்பு விடுத்து உள்ளோம் என்றார். (ச)

# யாழில் வாக்காளர் இடாப்பை கணனிமயப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் வாக்காளர் இடாப்பை கணனி மயப்படுத்த தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் யாழ். நகரில் தேர்தல் அலுவலகம் ஒன்று புதிதாக அமைக்கப்படவுள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் அடுத்த வருடம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாவட்டத்தில் 2008ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பைத் தயாரிக்கும் பணிகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஆரம்பமாகும் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது. (ச-3)

## இறுதித்...

வாரத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம்மேற்கொள்ள உள்ளதாகவும், இந்த விஜயத்தின் போது சர்வகட்சிப் பேரவையின் பரிந்துரைகள் எடுத்துச் செல்லப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்குமாறு இந்தியா இலங்கை அரசாங்கத்திற்கு வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வன்னி...

புலிகளுக்கு எதிராக படையினர் நடத்திய தாக்குதலில் 12 ஆயிரம் விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதேநேரம் வடக்கு நோக்கிய படை நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு முன்னர் வன்னிக் காட்டில் 2ஆயிரம் விடுதலைப் புலிகளே உள்ளனரென சரத் பொன்சேகா கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மாங்குளத்...

தீவிர முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர். பிற்பகல் 5 மணியளவில் படையினரின் முன் நகர்வு . விடுதலைப் ' புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இதில் 10 படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## கடற்புலித்...

இரண்டு கடற்புலித் தளங்கள் மீது விமானப் படையினர் குண்டுவீசி அழித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருக் கின்றது.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந்த இலக்குகள் மீது சரியான தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் கட்டைக்காடு தளம மீதான தாக்குதலையடுத்து அது தீப்பற்றி எரிந்ததாகவும் விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்தார்.

இதற்கிடையில் மாங்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் மேலும் ஒரு புதிய இராணுவத் தாக்குதல் அணியொன்று களமிறக்கப்பட்டிருப்பதாகவும் இந்த அணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வன்னி விளாங்குளம் பகுதியில் மோதல்கள் இடம்பெற்றதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ச-5)

## அவலங்களை...

மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்ற மான சூழ்நிலையும் எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது.

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் முன்னெடுக்கப்படும் கல்விச் செயற்பாடுகளில் இவ்வாறான நிலைமைகள் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றன.

தொடரும் இத்தகைய அவலங்களை முடிபுக்குக் கொண்டுவருவதற்கு நிலைபேறான அரசியல் தீர்வு ஒன்றே வழியாகும் என பல்கலைக்கழக சமூகம் வலியுறுத்துகின்றது என்றுள்ளது. (ச)

## தமிழக அரசின்...

வுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் பக்ஸ் மூலம் கடிதம் அனுப்பினார்.

தமிழகத்துக்கு வந்தபோது மத்திய அமைச்சர் தெரிவித்த செய்திக்கும் தற்போது வெளிவந்துள்ள செய்திக்கும் பெரிய முரண்பாடு இருப்பதாலும் நிவாரணப் பொருள்கள் முறையாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு சென்றடையாது என இங்குள்ள சில கட்சிகள் அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருப்பதாலும் தகுந்த விளக்கம் அளிக்குமாறு அந்தக் கடிதத்தில் முதல்வர் குறிப்பிட்டிருந்தார்.

மத்திய வெளியுறவு அமைச்சர் நடவடிக்கை எடுத்து, அவரது செயலர் மூலம் தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு பக்ஸ் மூலம் விளக்கம் அளித்துள்ளார்.

அந்த விளக்கத்தில் இலங்கை வடபகுதியில் போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு நிவாரணப் பொருள்கள் இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதருக்கு அனுப்பப்படும்.

அதை அவர் பெற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் மூலம் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது. (ச-5)

## அரசாங்கத்தை கவிழ்...

ஆளும் கட்சிக்கு எதிரான அனைத்துக் கட்சிகளையும் இந்தக் கூட்டணியில் இணைத்துக் கொள்ளவிருப்பதாகவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு,மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

கூட்டணி அமைப்பது பற்றி அரசாங்கத்துக்கு எதிரான கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருவதாக குறிப்பிட்ட கருணாதிலக கூட்டணி அமைப்பதற்கான பொறுப்பை கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கூட்டணி தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டதும் ஊடகங்களுக்கு அறிவிக்கப்படும் என கஜந்த கருணாதிலக மேலும் கூறினார்.

இதேவேளை இக் கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணைத்துக் கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## அவசர தேவைக்காக...

செயலரிடமிருந்தோ பெறப்பட்ட பயணப் பாதுகாப்பு அனுமதிப் படிவங்களை பூரணப்படுத்தி அதன் பிரதி 01,

பயணிப்போருடைய தேசிய அடையாள அட்டைகளின் பிரதிகள் 02, இராணுவத்தினரால் வழங்கப்பட்டிருக்கும் குடும்பப் பதிவு அட்டையின் பிரதிகள் 02,

பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டிருக்கும் குடும்பப் பதிவு அட்டையின் பிரதிகள் 02,

அவசர தேவையை ஏற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் (பக்ஸ் தகவல்) பிரதிகள் 02,

கிராம சேவை அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் (அதில் தங்கியிருக்கும் முகவரி, தென்பகுதிக்குச் சென்று தங்கவிருக்கும் இடத்தின் முகவரி,அவசர தேவையையும் பயணிப்போர் பயங்கரவாத மற்றும் அரச விரோத செயற்பாடுகளுக்கு தொடர்பில்லை என்பதையும் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்),

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் விண்ணப்பத்தை பிரதேச செயலரின் அனுமதியின் பின்னர்அருகில் இருக்கும் இராணுவ முகாமில் ஒப்படைத்து பெறப்பட்ட பற்றுச் சீட்டை 48 மணித்தியாலங்களின் பின்னர் உங்கள்பிரதேசத்தின் சிவில் இணைப்பதிகாரி அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பயண பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அதனை விமானப் பயண வசதியை வழங்கும் தனியார் நிறுவனங்களில் (ஏரோ லங்கா / எக்ஸ்போ எயார்) அல்லது கப்பல் பயண ஒழுங்குகளை மேற்கொள்ளும் மாவட்ட செயலகத்திலோ ஒப்படைத்து பயணச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள முடியும்.

பயணச் சீட்டுடன் பயணப் பாதுகாப்பு அனுமதியை இராணுவத்தின் உட்செல்லும் அல்லது வெளியேறும் நிலையத்தில் சமர்ப்பிக்கவும் என்றுள்ளது. (ஏ)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.